Regis... 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில்பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1. } 1910ஞ் செப்டம்பர்மீ 15உ.
சாதாரணஞ் ஆவணிமீ 31உ. { பகுதி 5.

ப. நாராயண அய்யர் B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர் B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

மதுரை.
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளட


| | | பக்கம். |
|---|---|---|
| ஜீவப்ராணிபிராணிகளும் நம்முடைய உத்திரவாதமும் | சிவராமசுப்பிரமணிய ஐயர் | ௧௩௫ |
| ஸ்ரீ சதாசிவப்பிரமேந்திரர்—எஸ். சாமிநாதையர் | | ௧௪௦ |
| அவதாரங்களில் முக்கியமாய் பரசுராம அவதாரத்தின் உண்மை | தி. சதாசிவ அய்யர் | ௧௪௯ |
| ஸமய தத்வம்—ஸ்ரீநிவாசாச்சாரியார் | | ௧௫௩ |
| சங்கீதம் அதன் உயர்வும் தாழ்வும் | பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் | ௧௬௦ |
| புனர்ஜென்மம் உண்டு என்பதும் அதன் அவசியமும் | வி. வெங்குஸ்வாமிஜயர் | ௧௬௧ |
| சமாசாரம்—பத்திராதிபர். | | ௧௬௩ |


---


# THE

## ORIENTAL PROGNOSTIC OBSERVATORY.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (LOND) O.M.D.S.FV. (BERLIN).

M.O.S.M.F. (PARIS): ETC.

Charges very moderate for the work turned out !

We do not for a moment deny that there are plenty of imposters who in the name of astrology are making flase predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems. Asiatic and European. Struck by our ablities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN LEO, writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, SAMI PILLAI ST.
Chulai Madras, N.C.

**V. V. Ramanan,**
Corresponding Director.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1 } 1910௵ செப்டம்பர்௴ 15௳
சாதாரண௵ ஆவணி௴ 31௳ { பகுதி 5

## *கீழான பிராணிகளும் நம்முடைய உத்திரவாதமும்.

உலகத்தில் ஜீவாத்மா பல சரீரங்களை யெடுத்து மேன்மேலும் அபிவிர்த்தியாகிக்கொண்டு வருகிறான். ஒரு செடியில், நேற்றுவரையில் ஒன்றுமில்லாமல், இன்று ஒரு மொட்டு ஏற்பட்டு வரவரப் பெரிதாகி, மலராய்ப், பின்பு காயாய்ப், பழமாய், வித்தாய், அபிவிருத்தி அடைவதைப்போல, ஜீவாத்மா மேற்கண்ட விதமாக சரீரங்களை யெடுத்து விகாசம் பெறுகின்றான். இவ்விகாச முறையின், நமக்குக் கீழான பிராணிகள், இனிவருங்காலத்தில், பெரிதான பிராணிகளில் இருக்கின்றஜீவாத்மாவாகும், பின்வருங்காலத்தில் நம்மைப்போன்று மனித சரீர மெடுக்கும். இக்கருத்தை மாணிக்கவாசகர் அடியில் வரும் பாசுரத்தில் உபதேசித்துள்ளார்.

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனி வராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், எம்பெருமான்".

* Vide Adyar Talks.

2. அதனுல் நமக்குக்கீழான பிராணிகளை நம்முடைய இளமையான சகோதரர்களாக பாவிக்கவேண்டும். பிராணிகள் நம்மைப்போல் ஈசுவர அம்சமுள்ளவைகள் எனவுணரவேண்டும்.

"எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகும்
இலங்கும் உடல், உயிர் அனைத்தும் ஈசன் கோவில்"
"வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே?"

என்ற வசனங்களினுல் ஈசுவரனே கீழான ஜீவராசிகளிலும், திரோபாவமடைந்து, நியந்தாவாகயிருந்து, அவையவைகளை தம்தம் தொழில்களைச்செய்யும்படியாக நடத்துகின்றுரென நினைக்கற்பாலது.

3. அதனுல் எவ்விதமான சரீரங்களை ஜீவராசிகள் அமையப்பெறினும், அவைகளின்மேல் நாம் அன்பு பாராட்டக்கடவோம். அவைகளுக்கு நம்மாலியன்றவளவில் உதவி புரியவேண்டும். அப்படி உதவி புரிதலுக்கு கூடியவரையில் அந்தந்த ஜீவராசிகள், இன்ன இன்ன நிலையில் உள்ளதெனவுணர்ந்து, அதற்கு ஏற்ப, நாம் உதவி புரியவேண்டும். நம்முடைய கிரகங்களிலிருக்கின்ற பசு, காளை, நாய், பூனை, குதிரை முதலியவைகள், இனி மேன்மேலும் விகாசம் பெற்று, நம்மைப்போல் மனிதர்களாக ஆகவேண்டு மென்பது, ஈசுவர சங்கல்பமென நாம் நன்குய் அறிந்துகொண்டோமானுல், அவைகளை அன்போடும், ஆதரவோடும் நடத்துவோம். அவைகளிடத்தில் அறிவானது முளைக்கிளம்பியிருக்கிறது. அவைகள், மனித சம்பந்தமில்லாமல் சுவேச்சையாக நடமாடும்படி விட்டோமாகில், அநேக காலங்களுக்குப்பிறகு, அவைகளின் அறிவு, தாமசமாய் மெல்ல மெல்ல, அபிவிருத்திபடைந்து விகாசம் பெறும். அப்படியில்லாமல் சீக்கிரம் அவைகள் விகாசம்பெற வேண்டி, மனிதனுடைய சம்பந்தம் அவைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இச் சம்பந்தமானது அவைகளுக்குப்பயன் படும்படியாய் நிகழவேண்டும்; அவைகளுக்கு நல்ல சுபாவங்களை உண்டுபண்ண வேண்டும்; தீமையான குணங்களைத் தவிர்க்கவேண்டும். இப்பிராணிகள், சுவேச்சையாய் காட்டில் திரி

யுங்காலத்தில், குரூரமானவைகளாகவும்,முரட்டுத்தனமானவைகளா கவும் இருக்கின்றன. நம்முடையசம்பந்தம் பெறவே, அச்சம்பந்தம் நேர்மையாயிருக்குமாயின், இப்பிராணிகள் தம்முடைய இயற்கையா ன குரூரத்தன்மையும், முரட்டுத்தன்மையும் வர வர நீங்கப்பெற்று, அன்பும் விசுவாசமுமுள்ளவைகளாகவும்,மலர்ந்த அறிவுள்ளவைகளா கவும் ஆகின்றன.

4. அவைகளுக்கு நன்மை பயக்குமாறு நாம் அவைகளை நடத் தவேண்டும். இப்போது அவைகளுக் கேற்பட்ட விகாசமுறையின் தர்மமானது என்னவென்றால், காட்டில் அவைகள் சுவேச்சையாக விருந்தகாலத்தில், அவைகளின் இயற்கையான துஷ்டகுணங்களும் குரூரசுபாவமும் முரட்டுத்தன்மையும் நீங்கி, நன்மையுள்ள சாந்த மான பிராணிகளாக அமைய வேண்டு மென்பது தான். உதாரண மாக நாயை வேட்டைக்காகவும், வேட்டை மிருகங்களைக் கொல்லுவ தற்காகவும்பழக்கினால், எந்த துஷ்டகுணங்கள் அவைகளினிடமிருந்து நீக்கப்படவேண்டுமோ, அவைகள் ஸ்திரப்பட்டு அதிகமாக அபி விருத்தி அடையும். வேட்டையாடும் தொழிலினால் அந்நாய்க்கு கொஞ்சம் அறிவு அபிவிருத்தியானாலும், துஷ்டகுணங்களும் அபிவி ருத்தியாகிறதினாலே வேட்டையாடுவதில் அந்நாய்க்கு அதின் விகா சமுறையில் கெடுதி செய்ததாகவே ஏற்படும். தன் சொத்தைக் காப்பாற்றவேண்டி நாய்க்கு மாமிசம் முதலானவை கொடுத்து பிறரைக்கடிக்கவும், மற்றவிதமான ஹிம்சை செய்யவும், பழக்குகிற வன், நாயின் துஷ்டத்தனத்தையும், மூர்க்க குணத்தையும் விர்த்தி யாகும்படி செய்வான். இவனும் நாய்க்குப் பாதகனாக ஆவான். விளையாட்டுக்கென்று சேவல்களை, சேவல் வேட்டைக்காகப்பழக்கு கிறவனும், குத்தவும், முட்டவும் மாடுகளை ஜல்லிக்கட்டுக்கென்று பழக்குகிறவனும், ஒரே தன்மையான பாதகர்கள். இப்பழக்கத்தில் சம்பந்தப்பட்ட பிராணிகளுக்கு சொற்ப அறிவு விருத்தியடைந் தாலும், பயம், த்வேஷம், மூர்க்கம் முதலான துர்க்குணங்களும் ஏற்படும். பின்பு, உலகத்தின் ஜீவவிகாச முறை நிகழ்வதில் ஒரு கால் இப்பிராணிகளின் சரீரத்தில் குடியிருந்தஜீவாத்மாக்கள்,மனித வர்க்கத்தில் பிரவேசித்து மனிதர்களாக அமையும்போது, இத்துர்க் குணங்கள் வெளிவரும்; இத்துர்க்குணங்கள், அநேகபாபகிருத்திய

ங்கள் உண்டாவதற்கு வித்தாக வற்படும். அத்தன்மையானகர்மங்க ளுக்கு முன்பு பழக்கினவன் உத்திரவாதியாவான். அக்கர்மங்களின் பலனில் அவனுக்கும் பங்குண்டு.

5. மனதர்கள், வெகுகாலமாய், கிழான ஜீவராசிகளை ஹிம்சித் துத் துன்பப்படுத்தி வந்திருக்கின்றார்கள். அதனால், பிராணிகள் முழுமையும் மனிதனைக்கண்டால் பயமும், அக்காரணம்பற்றி அவ ன்மேல் துவேஷமும், உள்ளவைகளாயிருக்கின்றன. இத்தன்மையா ன தங்களுடைய நடத்தையால், மனிதர்கள் கொடியபாவத்தைஉண் டுபண்ணிக் கொள்ளுகிறார்கள். அதன்பயனாக, பலவிதமானவியாதி களுக்கும் பலவிதத்துன்பமான சம்பவங்களுக்கும் உள்ளாகி, வருந் துகின்றார்கள். எத்தனையோ விதமான கொடுமைகளை மனிதன் செ ய்திருந்தபோதிலும்,பிராணிகள் தனிமையாயும், சுவேச்சையாயுமிரு க்குங்காலத்தில், மனிதனுக்கு எவ்விதத்தீங்கும் சுயமாகச் செய் யா. உதாரணமாகச் சர்ப்பமானது துன்பப்படுத்தப்பட்டு அல்ல து பயமுறுத்தப்பட்டாலொழிய, ஒருவனையும் கடிக்கமாட்டாது. மனிதனை உணவாகக்கொண்டு கொல்லும் மிருகங்கள்நீங்கலாக, மற் றைய மிருகங்களும் பிராணிகளும் எவ்விதத்துன்பமும் தாமே மனி தனுக்குச் செய்யாவாம். மனிதனை உணவாகக்கொள்ளும் மிருகங் களுங்கூட, வேறுவிதமாக உணவு அகப்படும்பட்சத்தில், மனிதனைத் தின்னாவாம். ஆனால், தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு மனிதன் கெடுதிசெய்வானெனப்பயந்து, ஒருகால் மனிதனைத்தாக் கும்.

6. பிரம்மஞான சபையைச் சார்ந்த ஒவ்வொருவருமாவது பிராணிகளைக்கொன்று அப்பிரேதங்களின் இறைச்சியை உணவாக க்கொள்ளக்கூடாது. வங்காளத்திலும், கன்னட ஜில்லாக்களிலும், சில பிராமணர்கள்கூட, மீனை ஜலபுஷ்பமென்றுசொல்லி உணவாகத் தின்பார்களாம். இதுவும் பாவமே. மிருகங்களைக்கொன்று அவை களின் தோல்முதலியவைகளை ஆடையாக அணிதலும், பட்சிகளைக் கொன்று அவைகளின் இறகுகளை அலங்காரவஸ்துக்களாக அமைத் துக்கொள்ளுதலும், பட்டுப் பூச்சிகளைக்கொன்றுஅவைகளால்உண்டு பண்ணப்பட்ட பட்டுநூற்கள்அமைந்த வஸ்திரங்களைத் தரிப்பதும், பாவசம்பந்தமானவைகள்தான். இவை உயிர்க்கொலைக்குக் காரண

கிழானபிராணிகளும் நம்முடையஉத்திரவாதமும். ககக மாயிருத்தலின், கொடியபாபமாம். தீயதொழிலாம். ஆனல், பட்டுப் பூச்சிகளைக் கொல்லாமலே பட்டுநூற்களை எடுக்கலாமென்று சொல்லு கின்றார்கள். இம்முறை பூர்ணமாக அனுஷ்டானத்திற்கு வருமா யின், பட்டுவஸ்திர சம்பந்தமாக பாபமில்லையென்று சொல்லலாம்.

7. தேவதைகளுக்குப் பிராணிகளைப் பலிகளாகப்போடுத லும் பாவமே, தேவதைகள் என்ருல், ஈசுவர கைங்கரியத்தை நி றைவேற்றும்பொருட்டு, ஈசுவரனல் நியமிக்கப்பட்ட தேவகணங் கள், அதிகாரபுருஷர்கள் முதலியவர்களாம். பிராணிகளை பலிபோ டுதல் மூலமாய் நிகழும் ஆராதனைகள் துராசாரமாம். ஈசுவரசம்மத மன்றும். சாஸ்திர விரோதமாம். அவ்வாராதனைகள் வாமமார்க்க த்தைச் சார்ந்தவைகள். வாமமார்க்கமோ துஷ்டமார்க்கம். தீமை பயக்கும் மார்க்கம். வாமாசார மார்க்கத்தைப் போதிக்கும் சில ஆ கமசாஸ்திரங்களுண்டு. அவைகள் துர்தேவதைகளை ஆராதித்து ஆசுரகிருத்தியங்களைப் போதிக்கும். அம்மார்க்கத்தை அனுசரிப் பவர் யாவரேனும் ஒருகாலும் நன்மைபெறுர். கொடுமையானபாவ ஜென்மங்கள் எடுப்பர். புவர்லோகத்தில்கொடிய வாதனைகளை அனு பவிப்பார்.

8. யக்ஞம், யாகம் முதலியவைகளில் பிராணி ஹிம்சையும் வதையும் ஏற்படுகின்றதனல் அதுவும் பாபமானதொழிலாம். இதை ப்பற்றி மதுரை பிரம்மஞானசபையின் (18-வது) பதினெட்டாவது லக்கமுள்ள துண்டுப் பத்திரிகையில் விவரித்திருக்கின்றதைக் கண்டு கொள்க. யாகமென்பது யோகத்தின் பிரதீகமே. சோபானமார்க்கத் தின் மஹா கிழானபடியில் அது இருந்து வந்தது. இக்காலத்தில் அதுவேண்டுவதில்லை.

9. எல்லோரும் ஜீவகாருண்யத்தை விருத்திபண்ண வேண் டும். ஜீவகாருண்யம் விருத்தியடைவதற்கு அன்பினல் நம் மகம் இளகவேண்டும். மனிதஜன்மம் மஹாஅருமையான ஜன்மம். இஜ் ஜன்மம் பெற்றது, ஜீவகாருண்யம் சாதிப்பதற்காகவே. "அன் போடியைந்தவழக்கென்ப, ஆருயிர்க்குஎன்போடியைந்ததொடர்பு."

ஆதலான், பிராணிகளை விகாசமுறை என்ற ஏணியின் கிழான படிகளில் உள்ளனவாக எண்ணுமின், அவைகளிடம் ஜீவகாருண்யத் தைப் பாராட்டுமின், அவைகளுக்குஆதரவாக இருமின், "அன்போடு உருகி அகம் குழைவார்க்கின்றி என் பொன்மணியினை எய்த ஒண்ணுதே."

ஓம் தத் சத். சிவராமசுப்பிரமணியன்.

# ஸ்ரீ சதாசிவப்பிரம்மேந்திரர்.

1. புண்யபூமியாகிய நம்பரதகண்டத்தில் நீடூழி காலந்தொடங்கி யோகாப்பியாசமானது மகான்களால் அநுசரிக்கப்பட்டு வருகிறதென்பதும், யோகிகள் ஆங்காங்கு இலைமறை காய்கள் போல் வசித்துவந்திருக்கின்றனரென்பதும், உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற விஷயம். இக்காலத்திலும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் முதலிய மகான்களைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஆகையால் யோகசாஸ்திர வழிகளில் யாதொருகுற்றமில்லையென்பதையும், அதனை அநுசரிப்பதில் சிரேஷ்டமான பலனுண்டென்பதையும், எவரும் மறுக்கவொண்ணாது. பஞ்சாப் அதிபதியாயிருந்த மகாராஜா ரஞ்சித் சிங்கு ஆளுகையில், ஓர் ஆங்கில ரெஸிடெண்டு முன்பாக ஒரு யோகியைப்புதைத்துத்தக்க காவல் வைத்துப் பரீக்ஷை பார்த்ததில், அம்மகானுக்கு யாதொரு அபாயமும் நேரிடாமல் கறந்தபால் கறந்தவண்ணமே இருந்ததைக் கண்ணுற்ற அனைவரும்ஆச்சரியமடைந்தது சரித்திரப் பழக்கமுள்ள அனைவருக்கும் தெரிந்த விஷயமே. அம்மாண்புள்ள சாஸ்திரத்தைக் கையாள்பவரிற் சிலர் உலகத்தை மயக்கி வஞ்சிக்க முயல்வதாலும், சிறிது கைகூடிய சித்திகளை வைத்துக்கொண்டு சுயநலத்தையே தேடி., சாஸ்திரத்தின் மாண்பானநோக்கத்தை இழிவுபடுத்தி வருவதாலும், அதன்மகிமை சிறிது தற்காலம் குன்றிக்கிடக்கின்றது. உண்மையான யோகி, சித்திகளைக் கையாள ஆசைப்படான். அவன் அவைகளை இடையூறுகவே கருதுவான். அவன் ஏகாக்கிர சித்தத்துடன் பரம் பொருளையே எப்போதும் நோக்கியவண்ணமாயிருப்பான். அவன் ஜன சமூகத்தை அடிக்கடி ஒழித்து "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்று இருப்பதற்கும் அதே காரணம். ஒருகால் சித்தியைப் பயன்படுத்த நேரிடினும், ஜீவகாருண்யத்தின் பொருட்டே பயன் படுத்துவான். உண்மையான யோகிகளின் மகிமை வாசாமகோசரமானது. பலநாள் உற்றுநோக்குபவர்க்கே அவர்களுடைய மகிமை விளங்கும். நம் தென்னாட்டிலும் இவ்வாறான சாக்ஷாத்காரம் பெற்ற யோகிகள் பலருண்டு. அவர்களில் ஒருவர் நம் சதாசிவப் பிரமேந்திராளும். இம்ம

கான் பெயரையும் இவரது மகிமையையும் அறியாத புத்திமான் இத்தென்னாட்டிலில்லை. அத்துவைதிகள் இம்மகானைத்தெய்வமாகக்கொண்டாடுவார்கள். அவரது திருநாமத்தை உச்சரிக்குங்கால் எவரும் பயபக்தி விசுவாசத்துடனே கூறுவார்கள். அவ்வாறு பிரசித்தி பெற்ற இந்நல்லாரது குணங்களை உரைப்பதுநன்றென்றுகருதி, அவரது திவ்விய சரித்திரத்தை நண்பர்கள் அறியும் வண்ணம் ஒருவாறு சுருங்க எழுதலானேன். கர்ண பரம்பரையாக வந்திருக்கும் கதைகளும் அவரது சில கிரந்தங்களும் இன்னும் சில குறிப்புகளுமே இம்மகானது சரித்திரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றன.

2. நீர்வளமும் நிலவளமும் நிரம்பப்பெற்ற சோழநாட்டில்காவிரிக்கரைக்கண்ணுள்ள திருவிசை நல்லூர் என்ற கிராமமே இம்மகான் பிறந்து, வளர்ந்து, கல்விபயின்ற ஊர்; சுமார் 180வருஷங்களுக்கு முன்னிருந்தவர். அவ்வூரின் பெயருக்கேற்ப அது பல பிரபல வித்துவான்கள் நிறைந்து நல்லிசையோடு கூடியிருந்தது. அவ்வூரில் ஜானகிபரணியம் என்ற ஸமஸ்கிருத நாடகத்தை இயற்றிய ஸ்ரீராமபத்திர தீக்ஷிதர் என்ற ஒரு பிரசித்த வித்வானிருந்தனர். அப்பெரியோரிடம், ஐயா அவாள் என்று பிரசித்தி பெற்றவரும் ஆக்யாசதகம், தயாசதகம் முதலிய சிறந்த பக்திக்கிரந்தங்களை இயற்றியவருமான ஸ்ரீ வேங்கடேசர் என்றவரும், மகாபாஷ்ய கோபாலகிருஷ்ண சாஸ்திரி என்றவரும், நம் சதா சிவப் பிரமேந்திரரும் ஒரு சாலைமாணுக்கராகவிருந்து கல்வி பயின்றவர்கள். இந்தக்கோபாலகிருஷ்ண சாஸ்திரிஅவர்களே, பின்னர் புதுக்கோட்டைத் தொண்டமானுக்கு உபதேச குருவானார். தொண்டமான் இவருக்கு மானியம் கொடுத்த கி. பி. 1738-ம் வருஷத்துச் செப்புப்பட்டயம் இன்னும் இருக்கின்றது. மும்மூர்த்திகளின் அவதார புருஷர்களோவென்று அதிசயிக்கத்தக்க இம்மூன்று மாணவர்களும் உலகப்பிரசித்திபெற்றவர்களாய் தத்தம் நடத்தையில் உலகத்தாருக்கு நிதர்சனமாக இருந்து வாழ்க்கை நலனைக்கழித்தவர்கள். இம்மூவரினும் நம்மகான் மேற் போனவர். குருவினிடம் வித்தியாப்பியாசம் செய்யுங்காலத்தில் பல சங்கைகள் உண்டுபண்ணி விஷயங்களில் நன்கு வாதாடி உண்மை தெளிவதில் மிகவும் சாமார்த்தியமுடையவர். ஒரு நாள்

குருவினிடம் பாடங் கேட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பிவந்த பொழுது, தம் தாயார் விசேஷ விருந்துக்கு முயற்சி செய்வதைக் கண்ணுற்று, விசேஷம் என்னவென்று கேட்கத் தம்சம்ஸாரம் பெரியவளானதை அறியலானூர். அன்று சாப்பாட்டிற்கு ஒரு நாழிகை கூடவே ஆகும் போலிருந்தது. அச்சமயம் நம்மகான் ஏகாந்தமாக ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு சிந்திக்கையில், பின் வருமாறு சிலஎண்ணங்கள் அவர்மனத்தில் உதித்தன. “சம்ஸார வாழ்க்கை இப்பொழுதுதான் தொடங்கலாயிற்று. அதற்குள் பசிப்பிணியால் சில நேரம் வருந்தவாய்த்தது. இவ்வாழ்க்கையில் இனிஎத்தனை துன்பங்கள் நேரிடுமோ. இதில் நாம் அகப்பட்டு உழல்வதிற்பெருந்துன்பமே நேரிடும். ஒரு நாளும் ஈடேற முடியாது ஆகையால் இத்துன்பத்தை ஒழிப்பதேமேல்” என்று மனதைத்திடப்படுத்திக் கொண்டனர். தேடுவோர்க்குக் குரு கிடைப்பது அருமையா? தக்க குருவும் கிடைத்தனர். அவரிடம் யோகசாஸ்திர அப்பியாசம் செய்து, நாடோறும் அபிவிருத்தியாகித் தீவிரபக்குவத்தை யடைந்தனர். இச்சந்தர்ப்பத்தில் தான் இம்மகான் சில நூல்களும் கீர்த்தனைகளும் இயற்றியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இவர் செய்த கீர்த்தனைகளில் இரண்டே இக்காலம் வழங்கிவருகின்றன. அவையாவன :—

(1) “சிந்தாகாஸ்திகிலதேஷாம் சிந்தாகாஸ்திகில.”

(2) “ததிஜீவகும்பரூஹணிததிஜீவகும்”

இக்கீர்த்தனைகள் ஓங்கியகருத்துள்ளவை. இவை அம்மகானுடைய மனோநிலையை நன்குபுலப்படுத்துகிறதுமன்றி, அவரது சங்கீத ஞானத்தின் உயர்வையும் தெரிவிக்கின்றது. பக்தி மார்க்கத்தைக் கைக்கொண்டு நாம சங்கீர்த்தனம் பண்ணிக் கொண்டுவந்த ஐயா அவர்களுடன் நம்மகானும் பஜனை பண்ணுகிற காலத்தில், இக்கீர்த்தனை செய்திருக்கலாமென ஊகிக்கஇடமுண்டு. இக்கீர்த்தனங்களை வித்துவான்களும் பாகவதர்களும் மிகவும் உருக்கத்துடன் பாடுவதை இன்னும் கேட்கலாம். இம்மகான் இயற்றிய நூல்களாவன:- (1) சிவமானஸிகபூஜை (2 ஆத்ம வித்தியாவிலாசம் (3) சிவயோக தீபிகை. இம்மூன்றில் சிவமானஸிக பூஜை என்பது சிவபூஜைமகிமை

யைப் பற்றிக்கூறினும், பொதுவான பக்தி, ஞானத்தைப் பற்றிப் பேசுவதாகவே கொள்ளலாம். அதிலிருந்து இரண்டொரு உதாரணங்கள் கூறிக் காட்டுவேன்.

(1) "பகவானே! பிரபஞ்சத்தையே இருப்பிடமாகக்கொண்டஉமக்கு யான் எந்த இருப்பிடத்தை யளிக்கப்போகிறேன்.?' (2) "சுயம்பிரகாசமாயிருப்பரே! உமக்கு முன்யான்காட்டுகிற தீபம் எவ்வாறு பிரகாசிக்கும்."

ஆத்மவித்யாவிலாசம் என்றநூல் 64 ஆர்யாசுலோகங்களுள்ளது. தன்னைத்தானறிந்த யோகியினது பெருமையைக் கூறுவது, இதில் இம்மகான் தம் ஞானகுரு, பரமசிவேந்திரர் என்று குறிப்பித்திருக்கின்றனர்.

சிவயோகதீபிகை என்பது ஐந்து அத்தியாயங்களில் யோகத்தின் பலமார்க்கங்களைப்பற்றிப் பேசுவது; இஃது இம்மகானே இயற்றியதோ என்பது சந்தேகத்துக்கிடமாயிருக்கின்றது. வித்துவான்கள், இதன் நடை ஆத்மவித்யா விலாசத்தைப்போல் தெளிவாகவும் அழகாகவும் இராமல் கரடு முருடாக இருக்கின்றது என்று, கூறுகிறார்கள். அம்மகானைப்பற்றிக் கேள்வியுறுகிற விஷயங்களுக்கு மாறான விஷயங்களுமிருப்பதாகவும்கூறுகிறார்கள். இதில் இம்மகானுக்கு சதாசிவயோகியென்று கூறியிருப்பதும் சந்தேகத்துக்கிடமாயிருக்கிறது. இதன் உண்மையை அறப்படித்த பண்டிதர் தீர்மானம் செய்யவேண்டியது.

3. நம்மகான் ஆசாரியரிடத்தில் யோகசாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டு அநுஷ்டித்துவருகையில், ஒருநாள் தம் குருவுடன் சிலவிஷயங்களைக்குறித்துக் கடுமையாகத் தர்க்கம்பண்ணிவந்தனர். அச்சமயம் தம்கட்சியை நிலைநிறுத்த உரத்த சப்தத்துடன்கூவும்பொழுது, குரு பொறுக்க முடியாமல் "சதாசிவா, என்றைக்கு உன்வாயடைத்து நீ மௌனமாயிருக்கக் கற்றுக்கொள்ளப்போகிறாய்" என்றனராம். உடனே நம்மகான் தம்குறையை யுணர்ந்து, "யாகாவாராயினும் நாகாக்க" என்ற வண்ணம் அன்றுமுதல், மௌன விரதத்தை ஜன்மவிரதமாகக் கைக்கொண்டனர். "மோனமென்பது ஞானவரம்பு" என

று கூறியிருப்பது இம்மகான் விஷயத்தில் உண்மையாயிற்று. உடனே அவர் குருவுக்கு வந்தனை வழிபாடுகள்செய்து, தம்பிழை பொறுக்கவேண்டிப், பின் வெளிக்கிளம்பிவிட்டனர். அதுமுதல் அவர் ஓரிடத்திலும் அதிகமாகத் தங்காமல் கண்டவிடங்களில் திரியஆரம்பித்தனர். அதுமுதல் வாய்திறந்து பேசவேயில்லை. இன்றியமையாதபோது, அங்கக்குறிப்புக்களாலேயே தம் கருத்தைத் தெரிவிப்பார். சிலசமயம் தரையில் எழுதியும் விளக்குவார். இபற்கையாய்த் தமக்குள்ளிருந்த கோபகுணத்தைச் சிறிதுசிறிதாக ஜயித்து வந்தனர்.

4. ஒருநாள் காலையில் ஒருவயல் வெளியின் வரப்பில் தலைவைத்துக்கொண்டு படுத்திருந்தனர். அவ்வழியாய்ச் சென்ற வேலைக்காரர்கள் இவரைநோக்கி "உலகப்பற்றை விட்ட இவர்க்கும் ஒருதலையணை வேண்டியிருக்கிறதுபோலும்" என்று கூறிப்போந்தனர். அடுத்தநாள் அதே இடத்தில் தரையில் தலைவைத்துப் படுத்திருந்தனர். அதே வேலைக்காரர்கள் மறுநாளும் அவ்வழியேசென்றனர். அச்சமயம் அவர்களில் ஒருவன் அவரை நோக்கி "எல்லா உலகப்பற்றையும் விட்டவர்கூடப், பிறர் குறைகூறுவதைக் கவனிப்பது ஆச்சரியமாயிருக்கிறது" என்றானாம். இதனைச்சிலர் இவரது சகபாடியாகிய ஐயர்அவர்களிடம் தெரிவிக்கவே அவர்களும் அதனைச் சுட்டியே "த்ருணமணிதா" என்று தொடங்கும் சுலோகத்தைச் செய்தார்களாம்.

5. இதன்பின் இம்மகான் இவ்வினிய இடம்விட்டு ஆமராவதி, காவேரி முதலிய தீர்த்தங்களிலுள்ள கருவூர், கொடுமுடி, நெரூர் முதலிய க்ஷேத்திரங்களில் வசிக்கத்தொடங்கினர். அண்ணாந்த முகத்துடனே கண்களின்பார்வை எப்பொழுதும் மேல்நோக்கிக்கொண்டிருக்கத், தன்னைச் சுற்றிநடப்பது இன்னதென்று ஒரு சிறிதும் அறியாதவராய்ப் பித்தர்போல், அவதூதராய்த் திரிந்துகொண்டிருப்பராம். காவிரிக்கரையை யடுத்த விஸ்தாரமான காடுகளிற் புகுந்து நெடுநாள் எவர்கண்ணிலும் படாமலே வசிப்பார். பிறகு திடீரென்று தோன்றுவார். பின் மறைவார். இம்மாதிரி நடந்துவந்ததை அவ்வூர் ஜனங்கள் பார்த்து இவரை மகானென்று அறிந்து பூஜித்து வந்தனர்.

6 ஒருசமயம் கொடுமுடிக் கிராமத்தின் காவிரிமனல் திட்டில் இம்மகான் நியமனப்படி பத்துத்தினங்கள்வரை ஸமாதியில் பிரம்ம நிஷ்டராயிருக்குங்கால், அதிகவெள்ளம்வந்து செடிகொடிகள் மரம் மட்டைகள் முதலிய எல்லாவற்றையும் வேரோடுகளைந்து எறிந்து சமன்செய்து, நம்மகானையும் உருட்டிக்கொண்டுபோவதை ஜனங்கள் கரையினின்று கண்ணுற்றுக் கூவிக் கலக்கமுற்று வருந்தினார்கள். வெள்ளம்அதிகமாயிருந்தபடியால், ஒருவரும் அதிலிறங்கி அவரை மீட்க முயலவில்லை. இரண்டொருமாதம் கழிந்தபின்னர், ஜலம்வற்றினதன்மேல் கிராமாதிகாரிகள் நதிஜலத்தை வியவசாயத்துக்காக வாய்க்காலில் திருப்ப ஆட்களைத் திரட்டிக்கொண்டுபோய்க் கிளைவாய்க்கால்வெட்டவே, மண்வெட்டியில் சொற்பம் இரத்தக்குறி தோன்றுவதைக்கண்டு, ஏதோ ஒருஜீவன் புதையுண்டுகிடக்கிறதுபோல் காண்கிறது என்று, மணலைத்தோண்டிச்சோதித்தபொழுது,நம்மகானுயிருப்பதுகண்டு திடுக்கிட்டனர். இன்னும் பரிசோதிக்கவே இம்மகானது கை, கால் முதலிய அவயவங்கள் வெவ்வேறாக மணலில் மறைந்து கிடக்கக்கண்டு அவைகளையெடுத்து ஒன்றுசேர்க்கவே*, நம்மகான் சமாதிகலைந்து எழுந்து கண்டோர் பிரமித்து வணங்கித்துதிக்க, ஓர் உரையுமாடாமல் வழியே ஏகினர். இச்சங்கதி பறையறைந்தாற்போல நாடெங்கும் பரவியது. இதிற்பலருக்கு நம்பிக்கைபிறத்தல் அரிது. யோகமார்க்கங்களில்நல்ல பழக்கமுள்ளவர்களுக்கும் சாஸ்திரநம்பிக்கையுள்ளவர்களுக்கும், ஒருகாலும், இவ்விஷயத்தில் சந்தேகம் உண்டாகாது. பிரத்தியக்ஷப்பிரமாணத்தையே கருதும் இக்காலத்தவர்க்கு அநுமானப் பிரமாணமும் சப்தப் பிரமாணமும் பயன்படா. ஆகையால் அவரவர் விசுவாசத்தாலேயே இவ்வரியவிஷயத்தில் நம்பிக்கையுண்டாகவேண்டுமேயொழிய, நாம் கூறுவதாற் பயனில்லை.

7. இதன்பின்னர் நம்மகான் திருநெல்வேலி, திருச்செந்தூர், மதுரை, இராமநாதபுரம் முதலிய இடங்களுக்குச்சென்று, சஞ்சாரஞ்செய்தனர். அவ்விடங்களில் நிகழ்ந்த பல அற்புதச் செய்கைகளை இன்னும் அவ்விடங்களிலுள்ள பெரியோர் கூறுகின்றனர். தம் சாம

* இதற்கு கண்டயோகம் யென்றுபெயர்.

ர்த்தியத்தைக்காட்ட இம்மகான் இவ்வற்புதச் செயல்களைச் செய்த தாக நாம் கருதவொண்ணாது. ஜீவகாருண்யத்தின்பொருட்டே இவச து மாண்புகள் தமக்குத்தாமே வெளிப்பட்டனவேயொழிய வேறி ல்லை. இவ்வாறு சஞ்சாரம்பண்ணுங்கால், ஒரு சமயத்தில் புதுக் கோட்டை சமஸ்தானத்தைச்சார்ந்த திருவரங்குளம் என்ற ஊருக் கடுத்த விசாலமானகாடுகளில், இம்மகான் வாசஞ்செய்யநேரிட்டது. அச்சமயம் அந்த சமஸ்தானபதியாகிய விஜய ரகுநாதத் தொண் டமான் (சிவஞானபுரம்துரைஎன்றும் வழங்கப்படுவர். இவர் கி. பி 1730—1769வரை ஆண்டவர்) இம்மகானைத் தரிசிக்கும்படியான பாக்கியம் பெற்றனர். இவ்வரசர் மிக்கசீலமும் பக்தியும் உள்ளவர். ஓர் ஏரிக்கடுத்த காட்டில் எப்பொழுதும் வசித்துக்கொண்டு தியான பரராயிருப்பவர். அவ்வேரிக்கு இன்னும் இவர்பெயரே வழங்கிவ ருகிறது. இவர் நம்மகானைத் தரிசித்ததுமுதல் அவரிடத்தில் மிக்க அன்புடையவராய், நிழல்போல்அவரைவிடாது பின்பற்றிதொண் டு பூண்டு வந்தனர். எங்குப் போனாலும் எங்கு மறைந்தாலும் தேடிக்கொண்டே சென்று, விடாது பின்பற்றி வந்தார். அடியிற்கண் ட திருமூலர் வசனம் இத்தகையரின் தன்மையை விளக்குகின்றது.

"சற்குணம் வாய்மை தயாவிவேகந் தண்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்த
லற்புதமே தோன்றி லாகுஞ் சற்சிடனே"

8. இச்சிஷசிகாமணியினதுகுருபக்தி முதிர்ச்சியையறிந்த நம்மகா ன் அவ்வரசனிடம் கருணைகூர்ந்து, மணலில் தக்ஷிணாமூர்த்தி மந்திரம் எழுதி உபதேசித்ததுமன்றி, பின்னும் ஏதேனும் தெரிய விருப்பமி ருந்தால் அக்காலத்தில் திரிசிரபுரத்துக்கு நான்கு மைல் தூரத்தில் கொள்ளிடக்கரையிலுள்ள பிக்ஷாண்டார் கோவிலில் வசித்துவந்த தம் சகபாடி மகாபாஷ்யம் கோபால கிருஷ்ண சாஸ்திரி அவர்களிட ம் அறிந்து கொள்ளச் சொல்லி எழுத்து மூலமான கட்டளையிட்டன ர். முற் கூறிய வண்ணம் அவரையே தொண்டமான் தன் சமஸ்தா னத்துக்கு வரவழைத்து உபசரித்துக் குருவாக்கிக்கொண்டு மானியம் விட்டு ஆதரித்தனர். இவ்விஷயம் கி. பி. 1738-ம் வருஷத்துப் பிற

ந்த மானிபச் செப்புப் பட்டய மூலமாகத் தெரியவருகின்றது. இன்றும் இச்சமஸ்தானத்தார், நம் மகான் மணலில் எழுதிக்காட்டித் தெரிவித்தபடியே நவராத்திரி பூஜையும் பிராமணர்களுக்கு அன்னதான முதலிய தானங்களும் பிராமணக்குழந்தைகளுக்குச்சுக்கிரவாரந்தோறும் சுயம்பாக முதலிய தர்மங்களும், நடத்தி வருகின்றனர். தக்ஷிணாமூர்த்தி விக்கிரகமும் ஸ்தாபனம் செய்து அரண்மனையில்பூஜித்துவருகிறார்கள். நம்மகான் மந்திரம் எழுதிய மணலையும் பக்தி சிரத்தையுடன் எடுத்து வந்து கருந்தனம்போல் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிலேயே சேமித்துவைத்திருக்கின்றனர். இம்மகானது கடாக்ஷவீக்ஷண்யத்தாலேயே இந்தச்சமஸ்தானத்துக்குப்பெரும் புகழும் பெருமையும் வாய்த்தன. ஆச்சரிய தருப்பணம் என்ற நூலில் வேறொரு விஷயமும் காணப்படுகின்றது. அரசனுக்குப்புத்திரப்பேறில்லாமல் இருப்பதை அறிந்த இம்மகான் சிறிது பசுவெண்ணெய் கொண்டுவரச்செய்து அதனைத் தம் கையால் வாங்கி அரசனிடம்கொடுத்துச் சாப்பிடச்செய்தனரென்றும், பின்னர் சந்ததியுண்டாயிற்றென்றும், அக்குமாரனுக்கு நவநீதத்தொண்டமான் என்று நாமகரணம் சூட்டினரென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆ! ஆ! அவ்வரசனது பாக்கியமே பாக்கியம்.

இம்மகானது அநுக்கிரகம்பெற்று ஒருபிராமணர் மைசூர்சமஸ்தானத்துக்குச் சென்று அநேக வெகுமதியும் கருவூருக்கடுத்த நெரூர்கிராமத்தில் நஞ்சைநில மானிபமும் பெற்றனர். அவ்வந்தணருடைய சந்ததியார் அந்த மானிபங்களை அநுபவித்துக்கொண்டு இன்றும் நெரூர்கிராமத்திலிருக்கிறார்களாம்.

9. ஒருநாள் நம் மகான், இன்ன தினத்தில் தாம் சமாதிக்குள் ஐக்கியமாகவேண்டுமென்றும், அதற்காக ஒரு குழிவெட்டி, வேண்டிய சாமான்களை ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், அச்சமயம் காசியிலிருந்து ஒரு பிராமணன் பாணலிங்கம் கொண்டுவருவானென்றும், தெரிவித்திருந்தனர். அவ்வாறே, நெரூர் கிராமத்தாரும் புதுக்கோட்டை சமஸ்தான மந்திரி பிரதானிகளும் சர்வ ஜாக்கிரதையாயிருந்தார்கள். சுவாமிகள் சொன்னபடியே குறித்தகாலத்தில் காசியிலிருந்து லிங்கத்துடன் ஒரு பிராமணன் வந்து சேர்ந்தான். நம் மகான் சமாதியிருந்து சித்தியடைந்தபின்

தம்முடைய சமாதிக்கு அடுத்து ஓர் ஆலயங்கட்டி, லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜை நடத்திவரச் சொல்லியிருந்தபடியே, தொண்டமான் ஆலயங்கட்டுவித்து பூஜைக்காக நெரூர் கிராமத்தில் பூமி வாங்கி மானியமாக விட்டதுமன்றி, நவராத்திரியில் விசேஷமான ஆராதனம் நடத்தப் புதுக்கோட்டையிலிருந்தே அநேகம் பிராமணர்களை நியமித்து அனுப்பி, வருஷா வருஷம் உற்சவம் விமரிசையாய் நடத்திவருகிறார்கள். இந்த நெரூர்க்கோவிலையும் நம் மகான் சமாதியையும் சில வருஷங்களுக்குமுன் யானே நேரிற் சென்று பார்த்தேன். சமாதியானது கோவில் பிராகாரத்திலிருக்கின்றது. ஒருமேடைமேல் ஒரு வில்வமரமும் அதன் அடியில் சிறு காஷாயபத்தாற் சுற்றப்பட்ட ஒரு சிறு மிருத்திகைலிங்கமுமிருந்தது. அதனையே சமாதி என்று அங்குள்ளவர்கள் கூறினார்கள். என்னோடு மதுரையிலிருந்து வேறு இரண்டு நண்பர்கள் வந்திருந்தனர். மூன்றுபேரும் சமாதிக்கருகிற் செல்கையில் எங்கள் மூவருக்கும் ஏககாலத்தில் ஒரேவித ஆனந்தமும் பயபக்தியும் எங்களையறியாமல்உண்டாயிற்று. எங்களில் ஒருவர் யோகாப்பியாசம் பயின்றவர். மகான்கள் சந்நிதி விசேஷத்தால் உள்ளன்புடையோருக்கு அவ்வாறு உணர்ச்சி உண்டாகுமென்று கூறினர். அவ்வூரில் நாங்கள் சென்றபொழுது ஒரு பெரியவரைத் தரிசித்தோம். அவர் தோற்றத்தால் கிருகஸ்தாச்சிரமப் பிராமணராயிருப்பினும், மனோநிலையால் உயர்ந்த துறவிபோல் இருந்தனர். ஏகவார போஜனத்துடனிருந்துகொண்டு, முற்றுந்துறந்த மனமாண்புடையராய் அவ்வூரிலுள்ள திரிமதஸ்தர்களுக்கும் மூன்று பாஷ்யத்தை அவரவருடைய பக்குவத்துக்குத்தக்க வண்ணம் பாடஞ் சொல்லிக்கொண்டு, நாடோறும் காலை 7மணிமுதல் 10மணிவரை நம்மகானுடைய சமாதியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு உபநிஷத் பாராயணம் பண்ணிக்கொண்டு பரமசாந்தராயிருந்தனர்.

10. கோதாவரி தீரத்தில் நம்மகானுக்கு மற்றொரு அதிஷ்டானமிருப்பதாகவும், அவ்விடத்திலும் இவ்வாறே இவருடைய சிலமகிமைகள் வெளிப்பட்டதாகவும் கர்ணபரம்பரைஉண்டு.

மிதுனமாதம் ஜேஷ்டசுத்த தசமியில் இன்றும் இவரது சிஷ்யகோடிகளின் சந்ததியார் இம்மகானது மகிமையைக் கொண்டாடி வருகின்றனராம்.

எஸ், சாமிநாதையர்.

## அவதாரங்களில் முக்கியமாய்ப் பரசுராம அவதாரத்தின் உண்மை.

(109-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவர்களைத் தூஷிக்கவில்லை. இவர்களை மகாபுத்திமான்கள் உநீஷிணஃ மனீஷிண: என்று கீதையில் 18-வது அத்தியாயத்தில் 3-வது சுலோகத்தில் பகவான் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர்கள் பகவான் "மேமதம்" என்று 3-வது அத்தியாயம் 32-33-வது சுலோகங்களில் சொன்ன பகவதபிப்பிராயத்தை அனுசரித்தவர்களாக மாட்டார்களென்று எனக்குத் தோன்றுகிறது. அகங்கார மமகாரங்களின் வேரான அவித்தையை நாசம் செய்து வாஸ்தவ மோக்ஷ சந்நியாசத்துக்கு யோக்கியர்களான நரனெனும் ரிஷியினவதாரமான அர்ச்சுனன் தேவாவதாரங்களான வசுதேவ கோப கோபி உத்தவப் பிரபிதிகளை இரக்ஷித்து, அவர்களை வியாஜித்து அனுத்தம தர்மங்களை யெல்லாம் கலியுக ஜனங்களுக்கு உபயோகமாக பிரவர்த்திப்பித்த அவதாரம் இந்த கருணை ஞானமேகசியாமளாவதாரம்.

15. கடைசியாய் மிகுந்த ஆறுவதாகிய ஸ்ரீ பரசுராமாவதாரம் அந்தக்காரணானுக்கிரக அவதாரம். அந்தக்கரணத்தையே, நம்ஞான மாதாவானஹெலிநாம்பாள் அம்மையார் கீழ்மனத்தையும் மேல்மனத்தையும், அதாவது மனசையும் விஞ்ஞானத்தையும் சம்பந்தப்படுத்தும் பாலம் என்று, இதைஉவமித்திருக்கின்றார். இந்தப்பாலத்தின் ரக்ஷகரும், இந்தப்பாலச்சண்டையில் ஜயித்த வீரரும், (Warrior) இந்த பரசுராமரே. நம்முடைய இருதயத்தில் சண்டைதொடங்கும் பொழுது, இந்த வீரரை நம்பவேணும். இந்த வீரர் நமக்காக சண்டைசெய்து ஜயித்துக் கொடுப்பார். பிரஹ்மஞானி (தியாசபிஸ்டு) என்னும் உயர்நலம் அமைந்த பெயருக்கு உரித்தான குணங்களைச் சம்பாதிக்க முயல்கிற நாம் ஒவ்வொருவரும், அதாவது சுயநயம் பாராட்டும் பிரவிர்த்தி மார்க்கத்தை விட்டு, பிறர் நலம் கருதும் நிவிர்த்தி மார்க்கத்தில் யத்தனம் செய்கின்ற ஒவ்வொருவரும், அதாவது அவித்தியாபலமும் அசனுதியும்குன்றி, வித்யாபலமும், அசுசாதியும், தியாகதர்மமும், விர்த்திஅடையக்கருதும் நாம்எல்லா

ரும்,இந்தபரசுராமரை அடைந்தால், அவரால் அந்தக்கரணம்சுத்தம் பெற்று பலமடைந்து, தருமக்ஷேத்திர குருக்ஷேத்திரமான சண்டையில்ஜயிப்போம்என்பது நிச்சயம். இந்தமகானுபாவரோ பிரஹ்ம ரிஷியும் ப்ருகுராஹமென்றும், கவீ நாவேவ நாகவி: என்றும், பகவானாலேயே கியாதிபெற்ற பார்க்கவகுலத்தில்தோன்றினவர். பிரவிர்த்திமார்க்கசாகைகளான ஹேஹய தாலஜங்க க்ஷத்திரியர்களுக்கும், நிவர்த்திமார்க்க பார்க்கவ சகாத்துவிஜர்களுக்கும் தொன்று தொட்டு, வைரயுத்தங்கள் ஏற்பட்டிருந்தன. பிரவிர்த்திமார்க்க க்ஷத்திரிய பலமே மேல் நோக்கி இருந்தது. அதற்குமுக்கியகாரணம்க்ஷத்திரிய நற்குணங்களில்மற்றக்காலத்தில்எவ்வளவு அபிப்ராயபேதமிருந்தாலும், சத்துருவை எதிர்க்கும் காலம் வரும்பொழுது தலைவன் சொற்படி நடத்தல் (Disciplned obedience to a leader when the time of action has come) என்கிற குணம் பிராமணர்களுக்குள்ளில்லாததால்தான். இந்த இரகசியத்தைத்தெரிந்தவனாய் இதைத்துரியோதனன்பீஷ்மாசாரியாரிடம்சொல்லிஅவரைச்சேனாதிபதியாயிருக்கும்படி கேட்டுக்கொண்டான். கர்னன், சல்லியன், அசுவத்தாமா, இவர்களுக்கு இந்த தர்மம் (Leadership and disciplned obedience to a leader) போதாது. இந்தநற்குணம் உண்டாவதற்கென்று ஸ்ரீ பரசுராமருடைய தகப்பனார் ஜமதக்நீ என்பார், க்ஷத்திரிய சருவை தவறி அக்கினியில் ஓமம்செய்து அந்த ஹவிஸையுட்கொண்ட பிராஹ்மண ஸ்திரீயிடத்தில் பிறந்தவர். பரசுராமர் மாதாவும் க்ஷத்திரியகுலத்தவளே. ஹேஹயபிரவிர்த்திமார்க்க சம்சார விருக்ஷமாய் விளங்கின கார்த்தவீரியார்ச்சுனனின் காமிய கர்மச் சொரூபத்தின் 1000 கைகளை ஞான வைராக்கிய வியாகுலவிஷாதமென்னும் பரசு அல்லது கோடாலியினால் வெட்டி முறித்தும், அவைமறுபடிமறுபடி துளிர்த்தன. அதாவது பிரவிர்த்திவாசனாக்ஷத்திரியகுலத்தை இருபத்தொருமுறை விடாமுயற்சியுடன் களைந்து, அந்தக்கரணமானபாலயுத்த பூமியான குருக்ஷேத்திரத்தில், க்ஷத்திரிய நற்குணசாரங்களானசௌரியம் தைர்யம் தேஜஸ்முதலியவைஈசுவரபாவமென்னும் ரத்தவெள்ளத்தினால்,சியமந்தபஞ்சகமென்னும் குளம் வெட்டி நாம் சண்டைபோடுங்கால் இந்தக் குளத்தில் ஸ்நாநம்செய்ய ஏற்படுத்தி அந்த ஜலத்தைக்கொண்டு யாகம்செய்துசண்டையில்ஜயமடைந்தால்,

தனக்குக்கிடைத்த சர்வ லோகசித்திகளையும் பகவதர்ப்பணம் செய்த மகாபுருஷன் இவரே. ஞான வைராக்கியத்தால் நைஷ்கர்ம சித்தியை அடைந்த யோகிகளின் தலைவரான ஸ்ரீமகாதேவ மூர்த்தியின் பரமபக்தர் இவரே. அந்தந்தப்படியிலிருப்பவர்க்கு அந்தந்த அவதார மூர்த்தியும் இஷ்ட தேவதையும் போலும், எல்லாப்படியிலிருப்பவர்க்கும் ஸ்ரீகிருஷ்ணவதாரம் போலும், நம்பெரும்பாலார் இருக்கும்படிக்கு துணை இந்த ஜமதக்கினி யவதாரமே. இவரே பிராஹ்மக்ஷத்திரிய பலங்கள் இரண்டின் தர்ம சாரத்தையும் அடைந்து, பிரவிர்த்தி சாகைகளை வெட்டி அதினால் உண்டான சித்திகளையும் வெறுத்தவர். பிரம்ம சரியத்தையும் வைராக்கியத்தையும் பூண்டவர். தர்மமும் வைராக்கியமும் மூர்த்திகரித்து வந்த பீஷ்மாசாரியாருக்கு அஸ்திர வித்தையை உபதேசம்செய்த மஹானுபாவர் இவரே. பாரதத்தில் அநேக இடங்களில் இவருடைய வீரியத்தையும் பலத்தையும் சொல்லும் உத்சாஹத்தை நோக்குங்காலத்திலும், தனித்து ஸ்ரீராமர் என்று இவரையே முக்கியமாய்ச் சொல்வதாலும் தாசரதீராமரென்று ரகுகுலராம சந்திரனையும் பாரதத்தில் அநேக இடங்களில் சொல்வதாலும், 'ராமசஸ்திரபிருதாமஹம்' என்ற கீதா வாக்கியம் இவரைக் குறித்ததென்று நான் நினைக்கிறேன். தம்முடைய குருவும் பிரபுவும் (Leader) ஆகிய பிதா ஜமதக்கினி என்பார் தம் தாயாரைக் கொல்ல உத்தரவு கொடுத்தார். அதைச் சிரமேற்கொண்டு தாய் என்று ஒரு நிமிஷமும் கருதாமல், உத்தரவை நிறைவேற்றினார். தாயார் மேல் அன்பின் குறைவாலோ? அப்படியன்று. அவன் அவன் சொந்த அபிப்பிராயம் எப்படி இருப்பினும் சில முக்கிய காரியங்களில் தலைவர் (Leader) சொற் கேட்கவேண்டும், அதையே பத்தியமாக்கொண்டு செலுத்தவேண்டுமென்ற தர்மத்தைச் செய்துகாட்டினார். பிதா சந்தோஷித்து அவரை பாதேனும் வரம் கேட்க என்று சொன்னவுடன், பகவான் ஸ்ரீராமர் தம்முடைய அன்பிற்குரிய தாயார் உஜ்ஜீவனமடையும் வரத்தையே கோரினார். தாம் உலகத்தில் அவதரித்து செய்யவந்த காரியங்களும் வேலையும் முடிந்தன என்று தெரிந்தவுடன், அக்காரியங்களுக்காகத் தமக்கு ஏற்பட்ட சக்திகளையும் அக்காரியங்களாலுண்டான லோக கதிகளையும் அடுத்த தாசரதி ராமச்சந்திரர் மூலமாய் வேறுபல லோ

கோபகார ஈசுவர காரியங்களுக்கு உபயோகப்படும்படி, வணக்கத்துடன் உடனே விட்டுவிட்டார். இவருடைய அநுக்கிரகத்தால் உண்டான கோகர்ணம் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள பூமியும் குருக்ஷேத்திரத்திற்குச் சமானமான புண்ணிய பூமியே. இந்த பூமியில் துஷ்ட வாசனைகளோடு சண்டை போடுவதற்காகக்கூடியிருக்கும் நமக்கு இவரே நற்றுணையாவார். இவருடைய சாசுவதஸ்தானமானது தென்ஹிம கைலாச பர்வதத்திற்கு மத்தியில் மகாத்துமாக்களின் வாசஸ்தானமாகிய அனேக குன்றுகளில், மகேந்திரமென்னும் மஹிமை தங்கிய மலையாகும். மகேந்திரமென்னும் பெயருடன் வடக்கே கங்கா சாகர சங்கமத்தின் அருகில் ஒரு குன்றும், இத்தென்தேசத்தில் ஒரு குன்றும் இந்த மகானுடைய ஸ்தானங்களாயிருப்பதாகத் தெரிகிறது. மகாத்மாக்களுடைய வாசம் எங்குமிருப்பினும் பக்த சிஷ்ய ரக்ஷணார்த்தம், எந்த இடத்திற்கும் அவர்கள் வருவதும் கஷ்டமாகுமோ? ஸ்ரீபரசுராமருடைய தகப்பனாராகிய ஜமதக்நி ரிஷியே இந்த வைவஸ்வதமன்வந்திர சப்தரிஷிகளாகிய

കശ്യപൊഽത്രിർവസിഷ്ഠശ്ച വിശ്വാമിത്രൊഽഥ ഗൌതമഃ
ജമദഗ്നിർഭരദ്വാജഃ

என்பவர்களில் ஒருவர் அடுத்த மன்வந்திர போதி சத்வ சப்தரிஷிகளாகிய

ഗാലവൊദീപ്തിരാമാഃ ദ്രൗണാരികൃപവ്യാസശ്ശൃംഗോ
വെദവ്യാസഃ

என்பவருக்குள் ராமர் என்று சொல்லப்பட்ட மூன்றுவது பெயர்க்குடையவர் ஸ்ரீபரசுராம மூர்த்தியே. நாம் உஜ்ஜீவிக்கும் பொருட்டு, இந்த பிரஹ்மஞான சபையைக்கருணையால் ஏற்படுத்திய நம்இரண்டு குருதேவ மகாத்துமாக்களுள்ள (white Lodge) வெள்ளிஅம்பலத்தில் ஸ்ரீ பரசுராம மூர்த்தியும் ஒருவராயிருக்க வேண்டுமென்று நான் சொல்வதும் அவசியமோ? மகாத்துமாக்களுடைய ஆசீர்வாத பலத்தாலும் அவர்களுடைய பிரதம சிஷ்யர்களுடைய முயற்சிகளாலும்ஸ்ரீபரசுராமரால்ஏற்பட்டவருண ராஜ்ஜியத்தில் நின்றும் வாங்கி அவர்நமக்குப்பிச்சையளித்த இந்தமலையாளதேசத்திலும், இதரதேசங்களிலும், இந்தப்பிரஹ்மஞான சபைமேன்மேலும்வளர்ந்து, நாம்

எல்லோரும் ஞான வைராக்கியங்களைப் பெறும்படி பரமேஸ்வரனைப் பூர்ணமனத்துடன் நாம் எல்லோரும் பிரார்த்தித்துக்கொள்வோமாக.

ஓம் தத்சத்.

தி. சதாசிவ ஐயர்.

## "ஸமயதத்வம்"

---

1. இவ்வுலகத்தில் தோன்றிநிற்கின்ற மதங்களெல்லாம் உண்மையில் ஒரே விதமான அபிப்பிராயத்தை உடையவைகளென்பதை நாம் முக்கியமாக அறியவேண்டும்.

𑌅𑌸𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑍇𑌦𑍍𑌵𑍇𑌦 𑌸𑌨𑍍𑌤𑌮𑍇𑌨𑌂 𑌤𑌤𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃

என்கிற சுருதியால் ப்ரஹ்மம் ஒன்று இருக்கிறதென்றறிந்தவன் ஸத்தான ஆஸ்திகனென்று சொல்லப்படுகிறான். அந்தப்ரஹ்மமானது நாம ரூபங்களோடு கூடிய இந்த ஜகத்தின் சிருஷ்டிஸ்திதி ஸம்காரங்களுக்குக் காரணமாயுள்ளது. அந்தப்ரஹ்மமே பரமமானதத்வம். சிலர் இரண்டு தத்வமென்றும், சிலர் மூன்று தத்வமென்றும், சொல்லுகிறார்கள். தத்வங்களில்-ஒன்று-இரண்டு-மூன்று என்கிற பேதமிருந்தபோதிலும் ப்ரஹ்மம் மேலான தத்வமென்பதில் யாதொரு ஆக்ஷேபணையில்லை. "ஸத்வம்" என்கிற வெள்ளைநூலாலும் "ரஜஸ்" என்கிற சிவப்பு நூலாலும் "தமஸ்" என்கிற கறுப்பு நூலாலும் சேர்த்து முறுக்கப்பட்ட அநாதி மாயையாகிற கயிறானது நித்தியனும் சுவயம் பிரகாசனும் அமலனுமுள்ள ஆத்மாவை, மூன்றுவிதமாகிய சரீரஸ்தம்பத்திற் கட்டுகிறது. அப்படி பசுப்போல் கட்டுண்ட ஆத்மாவானவன் தன்னிடமுள்ள பிரகாசத்தை இழந்து பசி, தாகம், லோபம், மோகம், ஜரை, மரணம் ஆகிய ஆறுவிதமான தரங்கங்களோடும், அகங்காராதிகளோடும்கூடி, ஸம்சார சக்கரத்திற் சுழன்று கஷ்டப்படுகிறான். இதை, அநுசரித்து சைவஸமயிகள் ஆத்மாவை-பசு என்றும்-பிரகிருதியை-பாசம்-என்றும் வியவஹரிக்கிறார்கள். இப்படி கஷ்டப்படும் ஆத்மாக்களுக்கு மோக்ஷத்தை அடைய தத்வஞானத்தைத் தவிர வேறு வழி இல்லை. தத்துவஞானமாவது ப்ரஹ்மம் இத்தன்மையதென்றறிவது. அந்த தத்வஞானம் எப்படி மோக்ஷத்திற்குக்காரணமாகிறதென்னில்-உதைத்

தில் மனிதனுக்கு ஒரு பதார்த்தத்தில் தோன்றி இருக்கும் பொய்யான அறிவானது மெய்யான அறிவினால் நிவர்த்தியாகிறது என்பது அனுபவஸித்தம். ஒருவனுக்கு இருட்டில் கீழே கிடக்கும் பழுதையைக்கண்டு, இது பாம்பு என்கிற பொய்யான அறிவு அந்தப் பழுதையினிடமாக உண்டாகிறது. பிறகு அப்படி உண்டான பொய்யான அறிவானது வெளிச்சமுண்டானபோது, இது பழுதை பாம்பல்ல, என்கிற மெய்யான அறிவினால், முன் பழுதையினிடமாக உண்டான, இது பாம்பு என்கிற பொய்யான அறிவு, நீங்குகிறது. இதுபோலவே, மாயையினால் அந்நம்-பிராணன்-மனம் என்கிற சரீரங்களிற் கட்டுண்டு, தன்னிடமான பிரகாசத்தை இழந்து, அஞ்ஞானமாகிற இருட்டில், தத்வத்தை அறிய முடியாமற் கிடக்கும் ஆத்மாவுக்கு, ஸத்தியமாயும் ஏகமாயுமுள்ள ப்ரஹ்மத்தில் தேவமனுஷ்யாதி ரூபமான பலவிதமான பொய்யான அறிவு உண்டாகிறது. பிறகு

"நெஹ நாநாஸ்தி கிஞ்சந" தத்வமஸி

இவை முதலான மஹாவாக்கியானுஸந்தான முதலான ஸாதனங்களினால் மெய்யான ப்ரஹ்மஸ்வரூப ஞான முண்டானபோது,

"பித்யதெ ஹ்ருதயக்ரந்தி:"

என்கிறபடியே அந்தப்ரஹ்மத்தினிடமாகப் பிறந்த தேவமனுஷ்யாதிரூபமான பொய்யான ஞானம் நசிக்கிறது. அந்தநாசமே மோக்ஷம். அந்த அஞ்ஞானம் நசித்தவாறே மாயையினால் ஏற்பட்ட ஸ்தூல ஸூக்ஷ்மஸம்பந்தம், நசித்து, விஞ்ஞான சரீரத்தோடு ஸோஹம் பாவனையினால், ஆத்துமாக்கள் "ப்ரஹ்மீபாவம்" என்கிற மோக்ஷத்தை அடைகிறார்கள்.

2. ஏழுவிதமான துளைகளோடுள்ள புல்லாங்குழலின் மத்திய பாகத்தில் நிரப்பப்பட்ட ஒரே தன்மையான வாயுவானது அத்துளைகளின் வழியாய் வெளிவரும்பொழுது 1. சட்ஜமம் 2. ரிஷபம் 3. காந்தாரம் 4. மத்திமம் 5. பஞ்சமம் 6. தைவதம் *7. நிஷாதம் என்ற ஏழுவிதமான நாமங்களை அடைவதுபோல், ஒன்றானப்ரஹ்மமானது மாயையினால் தேவ மனுஷியாதி நாநாவாகத்தோன்

* இந்த ஏழுவித ராகங்களின் முதல் எழுத்துக்களே, ச, ரி, க, ம, ப த, நி, என்றவைகளாக வழங்குகின்றன.

துகிறது. ஸோஹம்பாவனையினால் உண்டாகிற ஞானம் தத்வ ஞானம். ஆகையால் தத்வ ஞானத்தினாலேயே மோக்ஷமென்கிற புருஷார்த்தம் நமக்குக்கிடைக்கிறது. ஸோஹம்பாவனை என்பது ப்ரஹ்மத்தை நிர்க்குணமாக உபாஸித்தல். இந்த உபாஸனை, அத்வைத ஸித்தாந்திகளின் மதம். ஸகுணோபாஸ்தியாவது, விசிஷ்டாத்வைதிகளின் மதம். த்வைதிகளுக்குமப்படியே. இந்த ஸித்தாந்தங்களில் சிற்சில அவாந்தரபேதமிருந்த போதிலும், ப்ரஹ்மம் மேலான தத்வமென்பதிலும், தத்வ ஞானத்தினால் மோக்ஷமென்பதிலும், பேதமில்லை. இந்த மதாசாரியர்கள் தங்கள் அனுபவத்துக்கும் காலதேச ஜனங்களின் ஸ்வபாவத்திற்கும் தக்கவாறு, மதங்களை வெளியிட்டிருக்கிறார்கள். இதுதான் ஆஸ்திகர்களின் மதம்.

3. ஸாங்கியர்கள் இந்தப் பிரபஞ்சம், சுக துக்க மோகாதிகளோடு கூடியிருக்கிறது. அதில் சுகம் ஸத்துவகுணத்தினுடையவும், துக்கம் ரஜோகுணத்தினுடையவும், மோகம் தமோ குணத்தினுடையவும், காரியங்களாகையால் இந்தப்பிரபஞ்சமும் அந்தக் குணமயமாகவே இருக்கும். இந்த ரூபமான பிரபஞ்சத்திற்கு, இதற்கு அநுகுணமான வஸ்துவேகாரணமாக வேண்டும். மண்மயமான குடம் முதலானவைகளுக்கு, மண்ணே காரணமாகிறதுபோல், இந்தப் பிரபஞ்சத்திற்கும், இதற்கு அநுரூபமாய் ஸத்துவரஜஸ்தமோ ரூபமான ப்ரகிருதியே காரணமாகவேண்டும். பால், பசுவின் மடுவிலிருந்து தானே வழிவதுபோலும், நீர் தானே ஓடுவதுபோலும், ஒருவனுடைய அபேக்ஷையின்றி ப்ரகிருதியே ஜெகத்ரூபமாகவே பரிணமிக்கிறது. காந்தத்தைச் சமீபத்தில் வைத்தால் அசேதனமான இரும்பானது நகருகிறது. காலுள்ள ஒரு குருடன் தான் ஓரிடத்திற்குப்போக அசக்தனாயினும், கண்ணுள்ள ஒரு நொண்டி தானே ஓரிடம்போகச் சக்தியற்றவனாயினும், இந்த நொண்டி அந்தக் குருடன்மேல் ஏறிக்கொண்டு, இப்படிப்போ வென்று சொன்னால், அந்தக்குருடன் போகிறான்; அது போலவே, இந்த ப்ரகிருதிக்குத் தானேஸ்ருஷ்டிக்கச் சக்தியில்லாவிடினும், ஜீவன்வியாபாரமற்றவனாயிருந்தாலும், இந்தஜீவன் கிட்ட இருந்துகொண்டுஅசேதனமானப்ரகிருதியை, ஜெகத் ஸ்ருஷ்டியிலே ஏவுகிறான். ஏவுதலாவது, சமீபத்திலிருத்தலேயாம். அதினால் ப்ரகி

ருதி ஜெகத்தை ஸ்ருஷ்டிக்கிறது. புருஷன் ஸாக்ஷியாகவுள்ளவன்.
குணங்களின் ஸமபாவம் பிரளயமாகவும், விஷமபாவம்ஸ்ருஷ்டியாக
வும் இருக்கிறது. ஜீவனுக்கு, ஸம்ஸாரமோக்ஷங்கள் ஏற்படுவத
ற்கு,ப்ரகிருதியை ஒப்புக்கொள்ளவேண்டும்; ப்ரகிருதிசம்பந்தம் ஜீவ
னுக்கு ஸம்ஸாரம். ப்ரகிருதி புருஷ விவேசகம் பண்ணி, பின்புயோ
காப்பியாசத்தினால் ப்ரகிருதி சம்பந்தம்ஜீவனில் இல்லாதபடி செய்
தல் மோக்ஷமென்கிறார்கள். இந்த மதத்தில் ஜெகத்காரணம் ப்ரஹ்
மம், என்பதை ஒப்புக்கொள்ளாத தோஷம் ஒன்றே தவிர மற்ற
அம்சங்கள் வேதாந்திகளுக்கு ஸாதகமாயுள்ளவைகள்.

4. காணாத மதஸ்தர்கள் நாநாவித அவயவங்கள் சேர்ந்தால்,
அவயவி யென்றொருவஸ்துவுண்டாகிறது. அந்த அவயவங்கள் அதி
கமாகச் சேர்ந்தால் மலைபோல் பெரியவஸ்துவும், அற்பமாகச் சேர்ந்
தால் கடுகைப்போல் சிறியவஸ்துவும் உண்டாகிறது. இப்படி அவய
வங்கள் குறையக்குறைய அதற்கு ஓரிடத்தில் எல்லைசொல்லி நிறுத்
தவேண்டும். அந்த எல்லையான அவயவம் பரமாணு. அப்பரமா
ணுக்கள் ஈசுவரனுடைய ஸங்கற்பத்தினால், ஒன்றோடொன்று சேர்ந்
து ஜெகத்காரணமாகிறது, ஆகையால் பரமாணுக்களே ஜெகத்கார
ணம். ஈசுரன் அநுமானப் பிரமாணத்தினால் ஊகிக்கப்படுகிறான்
என்று சொல்லுகிறார்கள். இந்த மதத்தில் ஈசுரனை ஜெகத்காரண
மாக ஒப்புக்கொள்ளாமலிருப்பதும், ஈசுவரன் அநுமானப்பிரமாண
ஸித்தன், என்று சொல்லுவதும் சரியல்லவென்பது வேதாந்திக
ளின் ஆக்ஷேபணை. இம்மதத்தில் ஜெகத்தின் ஸ்வபாவத்தைச் சொ
ல்வதும், அதின் பரிசீலனமும், அழகாக விருப்பதால் இதிலும்
ஸாரமான அம்சங்கள் வேதாந்திகளுக்கு உபயோகமாக விருக்கின்
றன.

5. வைபாஷிகர்களும், ஸௌத்திராந்திகர்களும்,ப்ருதிவி, ஜலம்,
தேஜஸ்,வாயுவென்கிற நாலுவிதமான பரமாணுக்கள் உண்டென்கிறா
ர்கள்.அவைகும்பலாகச்சேர்ந்தால்ப்ருதிவி முதலானநான்குபூதங்கள்
உண்டாகின்றன. அந்த நான்கு பூதங்களும் சேர்ந்தால் சரீரேந்தி
ரியங்கள் உண்டாகின்றன. ஞான பரம்பரையே ஆத்மா. இவையெ
ல்லாம் முதல் க்ஷணத்திலுண்டாகி இரண்டாம் க்ஷணத்தில் நசிக்கின்

றனவாகையால், க்ஷணிகங்கள், பரமாணுக்கள் க்ஷணிகமாயினும், ஜெகதுற்பத்திஸ்வாபாவிகம்; அஸ்திரமானப்ருதிவபாதிகளில், ஸ்திரமென்ற புத்தி அஞ்ஞானம். அதுவே ஸம்ஸாரம். அதின் நாசம் மோக்ஷமென்கிறார்கள். இந்த மதத்தில் பிரபஞ்சம் அஸத்தென்று சொல்லுகிறது, அத்துவைத வேதாந்திகளுக்கு ஸாதகமானது.

6. யோகாசாரர்கள்மதத்தில், ஞானமாத்திரமேயுள்ளது. அதைவிட வேறுபதார்த்தங்களில்லை. அந்தஞானமேநீலம், மஞ்சள்முதலான ஸம்ஸ்காரங்களையு முடையது. அந்தஆகாரத்தையுடையதும் இருதயத்திலிருக்கிறதுமான ஞானமேவெளியில்குடம்முதலானபதார்த்தங்கள்போல்பொய்யான அறிவிற்குத்தோன்றுகிறது. ஞானத்தைத்தவிர வேறுபதார்த்தமில்லை. அப்படியிருப்பதாக ஒப்புக்கொள்வதுஸம்ஸாரம். அதின்நாசம் மோக்ஷமென்கிறார்கள். இப்படியே ஜைநம் முதலான மதங்களும், ப்ரகிருதி விசாரத்தையும், ஆத்ம விசாரத்தையும், சொல்லுகின்றன.

[illegible]
[illegible]

என்கிறபடியே வைத்தியர்கள் தேகஸ்திதியையும் காலத்தையும் ரோகிஷ்டர்களுடைய சரீரஸ்வபாவத்தையும் அனுசரித்து ஔஷதங்களைக்கொடுக்குமாறுபோலே, ஈசுவரன் காலதேசங்களையநுசரித்துமந்தபுத்தியுள்ள ஜனங்களின் உஜ்ஜீவனார்த்தம், அநேக மதங்களையும், அந்தந்த மதங்கள் உலகத்திற் பரவும்படி செய்வதற்கு தன் அம்சத்தாலே மதாசாரியர்களான மஹாத்மாக்களையும், அவதரிப்பித்து இருக்கிறார். எல்லா மதங்களும் மூடர்களாயுள்ள ஜனங்களுக்கு படிப்படியாக அறிவைவிருத்திபண்ணி கடைசியாக நேராக ப்ரஹ்மதத்துவத்தை அறியும்படியான அறிவைக்கொடுத்து மோக்ஷத்தை அடையும்படி செய்விக்கின்றன. ஆதலால்,

“ [illegible]
[illegible] ”

என்கிறபடியே காணுதாதி மதங்களில் அநேகமான ஸாரமான அம்சங்களுமுண்டு. அஸாரமான அம்சங்களு முண்டு. அவைக

வில் வேத விரோதமாயுள்ள அம்சங்களைத் தள்ளிவிட்டு ப்ரஹ்மஞானத்திற்கு ஸாதனமான அம்சங்களைக் கைக்கொள்ள வேண்டும். ஏன் அவ்விதம் அம்மதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றால், வியாதியஸ்தர்களுக்கு உத்தமமான ஔஷதங்களைக் கொடுக்கும்பொழுது அந்த ஔஷதங்கள் வாந்தி முதலான தோஷங்களை அடையாமலிருக்கும்பொருட்டு இதரமான பதார்த்தங்களைக் கூடச் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது போல், ஞானம் பூர்த்தியாக இல்லாத ஜனங்களுக்கு ப்ரஹ்ம வித்தையை உபதேசிக்குமளவில் அவர்களது ப்ரகிருதி ஸம்பந்தமான தோஷமானது அந்த ப்ரஹ்ம வித்தையை உட்கொள்ளாதபடி செய்கிறதென்று கருதி, அந்தந்த மதாசாரியர்கள் ஸ்தூலமான ப்ரகிருதி ஸம்பந்தமுள்ள ப்ரத்யக்ஷ சுகாதிகளையுஞ்சேர்த்துச்சொல்லியிருக்கின்றார்கள்.

"[illegible],
[illegible]"

என்கிறபடியே மாயையினால் அந்நம், பிராணன், மநம் ஆகிய இம் மூன்று சரீரங்களிற் கட்டுப்பட்ட ஆத்மாவினுடைய முதலாவதான அந்தசரீரத்தின் பந்தத்தை நிவிர்த்தித்து, பிறகு மற்ற சரீர பந்தத்தை நிவிர்த்தித்து, ஞான சரீரத்தோடு ஆத்மாவைச் சேர்த்துவைக்கவேண்டும். பந்தத்தை நிவிருத்திப்பித்தலாவது:— அந்த சரீரத்தின் அபிமானத்தைத்தொலைத்தல் தான். இவ்விதமான அபிமானத்தைத் தொலைப்பதற்கு கர்மயோகம், ஞானயோகம், கர்ம ஸன்னியாஸயோகம், பக்தியோகம் முதலானவைகள் கீதையிற் சொல்லியபடி ஸாதனங்களாகின்றன. அந்தந்த சமயங்களில், அந்தந்த மதங்கள் அந்தந்த பந்தங்களை நிவிர்த்தி செய்யவேண்டியதற்குரித்தான அறிவை உபதேசிக்கின்றனவென்றே, நாம்கொள்ளவேண்டும். அந்தந்த ஸமயாசாரியர்களையும், பகவதம்சபூதர்களென்றும், நினைக்கவேண்டும். ஆகவே எல்லா மதங்களும் ஒரே விதமான அபிப்ராயத்துடன் ப்ரஹ்மஞானத்தைப் பிறப்பிக்கின்றன என்பதில் தடையில்லை. இந்தக் கலிகாலத்துக்கு ஏற்ப ஆத்துமாக்களின் உஜ்ஜீவனார்த்தமாக,

"𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।"

என்கிறபடியே தர்மமூலமான ப்ரஹ்மஞானத்தை நிலைநிறுத்தி ஆத்ம கோடிகளை உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு பகவான் மஹாத்மாக்களாக அவதாரம்பண்ணி இந்தப்ரஹ்மஞான சங்கத்தை உண்டுபண்ணியிருக்கிறார் ஸ்ரீபாகவதத்தில் 8-வது ஸ்கந்தத்தில் 14-வது அத்தியாயத்தில்,

"𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚𑌾𑌨𑍁𑌯𑍁𑌗𑌂 𑌬𑍍𑌰𑍂𑌤𑍇 𑌹𑌰𑌿𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌧𑍃𑌕𑍍 ।
𑌋𑌷𑌿𑌰𑍂𑌪𑌧𑌰𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌯𑍋𑌗𑌂 𑌯𑍋𑌗𑍇𑌶𑌰𑍂𑌪𑌧𑍃𑌕𑍍 ॥
𑌸𑌰𑍍𑌗𑌂 𑌪𑍍𑌰𑌜𑍇𑌶𑌰𑍂𑌪𑍇𑌣 𑌦𑌸𑍍𑌯𑍂𑌨𑍍𑌹𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌰𑌾𑌡𑍍𑌵𑌪𑍁𑌃
𑌕𑌾𑌲𑌰𑍂𑌪𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌭𑌾𑌵𑌾𑌯 𑌪𑍃𑌥𑌗𑍍𑌗𑍁𑌣𑌃"

என்று சொல்லியிருக்கிறபடியே, பகவான் ஒவ்வொருமன்வந்தரங்களிலும், ப்ரஹ்மவித்தை லோபிக்கும் சமயத்தில், மஹா யோகிகளின் வடிவு கொண்டு காலத்துக்கு அநுகுணமாக ப்ரஹ்மஞானத்தை உபதேசிக்கிறார். அந்த பகவானே ரிஷிரூபத்தால் கர்மத்தையும், யோகி வேஷத்தால் யோகத்தையும், மரீசிபிரபிரிதிகளான மஹாருஷிகளின் ரூபங்கொண்டு, இந்தப்ரஹ்மஞானத்தை அநுபவிக்கக்கூடிய ஜென்மங்களையும், சிருஷ்டிக்கிறார். அந்த பகவானே ராஜ வடிவங்கொண்டு இந்தப்ரஹ்மவித்தைக்கு விரோதிகளாயுள்ளவர்களைத் தண்டிக்கிறார். ஆகையால் எல்லாரும்,

"𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌸𑍌𑌹𑍃𑌦𑌂 𑌭𑌵𑍇𑌤𑌰𑌾𑌂"

என்கிறபடி ஸஹோதர பாவத்துடன், உஜ்ஜீவிக்கும்படியாக பகவான் மஹாயோகிகளின் வடிவங்கொண்டு இந்த 'தியாஸபிகல்ஸொஸைடி' என்கிறப்ரஹ்மஞான சங்கத்தைப் பிறப்பித்தருளியிருக்கின்றனர் என்பதை நாம் நிச்சயமாக அறியவேண்டும். இந்தச்சங்கத்திற்சேர்ந்தவர்கள் தங்களை ப்ரஹ்மஞானத்திற்குப் பாத்திரர்களாகவும், லோகோபகாரமான கைங்கரியத்தைச்செய்யவேண்டுமென்று, கடவுளால் பிறப்பிக்கப்பட்டவர்களென்றும், மஹா பாக்கியவான்களாகவும், நினைக்கவேண்டும். சகோதரர்களே ! நாமெல்லோரும் இந்த சங்கத்தின் அதிபதிகளாயுள்ள மஹா யோகிகளான மஹாத்மாக்கள் கால தேச ஜனங்களை அநுசரித்து ப்ரஹ்மஞானத்தை வெளியிட்டிருக்கிறார்களென்றும், எல்லா மதங்களிலும் ஸாரமான அம்சங்களை நன்றாக ஆராய்ச்சி செய்தும், தற்கால நிலைமையை உத்தேசித்து நாம் உஜ்ஜீவிக்கும்படி இந்த ப்ரஹ்மஞான சங்கம் ஏற்பட்டிருக்கிறதென்றும் எண்ணி, காமக்குரோதாதிகளைவிட்டு சகோதர பாவத்துடன் வாழ்ந்திருக்கவேண்டுமென்று ஈசுவரனைப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீநிவாசாச்சாரியார், நாகபட்டணம்.

## சங்கீதம் அதன் உயர்வும் தாழ்வும்.

(113ம் தொடர்ச்சி)

எல்லா மாங்கனிகளும் மாமரங்களினல் பயக்கப்பட்டவைகளாயினும் நிறமும் இனிப்பும் மிகுந்து கொட்டை சிறிதாகி நாரின்றி அமைந்திருக்கும் மாங்கனியை உயர்ந்த சாதிக்கனியென நாம் வசனிக்குமாறு, எல்லாரும் மானிடர்களாயினும் பாடுவதற்கினிய குரலும் கேட்பதற்கினியகாதும் அடைந்து, விஷயத்தில் அவாவும் குன்றி, அதர்ம விருத்தியில்லாத மாந்தரே உயர்ந்த சாதியாரெனவும், அன்னவரே ஈசுவரனைக் கூவி, அவனருள் பெறுவதற்கு யோக்யதையுள்ளவர்களாவார் எனவும், தீர்மானிக்கலாகும். பண்ணிற்சுவையுணராதவர் உண்ணற்சுவை ஒன்றையே உணரப் பிறந்தவரெனக் கருதி திருவள்ளுவநாயனரும்,

> "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
> அவியினும் வாழினும் என்"

எனச் சொல்லியிருக்கின்றார். அம்முறையே,

> "பொருந்தா திசையில் சுருதியில் கானம் பொழிஅமுதை
> அருந்ாது தாளத் தமரா திசைப்பவர்க் காற்றநல்கித்
> திருந்தா திராகந் தனையு ணராதிருந் தேயிரப்போர்
> இருந்தாலும் என்பயன் போனாலும் எக்குறை இத்தலத்தே."

என சாமான்ய வசநமும் யாம் கேட்டிருக்கின்றோம். மேலும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்றும் வர்ணிக்கப்படுகின்றது இஃதன்றியும்,

[illegible]
[illegible]
[illegible] என்பதை அனுசரித்து,

> பிரப்பிணிக்கும் மருந்தாங் குறைவந்திடினும்மதி
> சோராதமைத்திடும் காமாதிநீக்கும் துயரமொன்று
> வாராதுகாக்கும் அருளூட்டுமன்னை வயிற்றிற் பின்னும்
> சேராது வாழ்விக்கும் சங்கீத மென்பது தேகியர்க்கே.

என கான வித்தையானது கொண்டாடப் படுகின்றது.

(இனிச்சங்கீதம் அமையலானமுறை விவரிக்கப்படும்.)

பி. எஸ். சுப்பிரமணியஐயர்.

## புனர் ஜன்மம் உண்டென்பதும் அதன் அவசியமும்.

இறந்த பின்தான் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக - பிறந்து இருந்து,
செய்யும் வினையால் அறிக இனிப்பிறந்து
எய்தும் வினையின் பயன் - (அறநெறிச்சாரம்.)

1. மனிதர்களுக்குள் மனோசக்திகளிலும் பலவாறான தாரதம்மியங்கள் இருக்கின்றன என்பதையாவரும் அறிவோம். இத்தாரதம்மியங்கள் உண்டாவதற்கு உள்ளகாரணம் மூன்றுவித சித்தாந்தங்களாக நிகழ்கின்றன. (1) கடவுளே தனித்தனி அவ்வித வேற்றுமைகளுடனே ஒவ்வொரு ஜீவனையும் சிருஷ்டிக்கிறார். அதாவது மனிதன், சுவசக்தியற்றவன். பரதந்திரன். அவன் கதியானது நம்மால் அளவிடக்கூடாத கடவுளின் இஷ்டத்தைப் பொறுத்தது. (2) புலன் அறிவு, சாஸ்திரத்தின்படி தகப்பன், மகன் என்ற வம்சாவளி முறையில் குணங்கள் முதலியவை பரம் பரையாய் அமைகின்ற தர்மம். அதாவது முந்தியதிற் போலவே மனிதன் பராதீனனாவான். தன்னுடைய சம்பந்தமில்லாத அன்னியரின் வினையின் பயனாக ஏற்படுகின்றான். (3) புனர் ஜன்மம் உண்டென்பது; அதாவது மனிதன் தன் பிரகிருதஸ்திதியைத்தானே செய்து கொண்டான். பழவினைப்பயனாக பிரகிருத நிலைமை ஏற்படுகிறது. அதனால் தன்னால் உண்டு பண்ணின விதியைத்தானே வெல்லக் கூடியது.

2. ஈசுவரன் தனித்தனி சிருஷ்டிக்கிறான் என்ற முதலாவதான சமாதானம் சரியானதன்று என்பதாய்ப் பொதுவாய் அறிஞர்கள் தவிர்த்து விட்டாலும், அதன் முக்கியமான சில விஷயங்களை இன்னும் அங்கீகரிக்கின்றார்கள். அதாவது, ஒவ்வொருவனின் குணமும் நிலைமையும் கடவுளால் பிறக்கும் பொழுதே ஏற்படுத்தப் பட்டன என்பதாம். பிரஞ்ஞாவானான மனிதனைத் தவிர மற்றஎல்லாவற்றுக்கும் விகாசத்தினால் அபிவிருத்தி உண்டென்றும், மனிதனுக்கு அவன் பிரஞ்ஞை சம்பந்தமாக முந்நிலைமை கிடையாதென்றும், ஆனால் முடிவற்ற வருங்கால நிலைமை உண்டென்றும், மேற்கண்ட வாதிகள் சொல்லுகிறார்கள். அவர்களுடையகொள்கையில், அவன் பிறக்கும் பொழுதே, கடவுளால் ஒருவித குணத்துடனே அமைக்

கப்பெறுகின்ருன் என்பதாம். இவ்வுலகில் அவன் வாழ்நாள் அக்குணம் பற்றியே நிகழும்; அவ்விதகுண அமைப்பில் அவன் பாதந்திரனுகிருன். அதைத் தவிர்க்க அவனுல் இயலாது. சிலசமயத்தில் நன்மையைப் பெறலாம். சிலசமயத்தில் தீமையையும் அடையலாம். தீமையானது துன்பகதியாம். அப்படி இருப்பினும் அவன் அதைப்பெறவேண்டுவது தான்; அதை விலக்க ஒண்ணுது.

3. நல்ல ஒழுக்கத்தையும் நல்ல சாமர்த்தியத்தையும், நல்ல சீலத்தையும், அடைவானுகில் அவனுக்கு அவை நலம்தரும். ஆனுல் அவைகளைப் பெற பாத்திரவானுவதற்கு அவன் முன் யாதும் செய்தான் இல்லை. அவன் குற்றம் செய்யும் சுபாவத்தையும், வியாதியையும், குடி இச்சையையும் பெற்றுப் பிறப்பானுகில், அவனுக்கு அவை துன்பந்தரும். ஆனுல் அவைகளைப் பெறஹேதுவாக முன் யாதொன்றும் செய்தவன் இல்லை. முந்தியதால் நித்தியமான பேரின்பம் கிடைக்கும். பிந்தியதால் நித்தியமான வேதனையைப் பெறுவான். பிந்தியதான துர்பாக்கியத்தை அவன் அனுபவித்தே தீரவேண்டும். அதைத்தவிர்க்க முடியாது. குயவன், தன்கையில் அகப்பட்ட மண்ணைத் தன்னிஷ்டப்படி செய்துகொள்ளுவானன்ருே? ஆனுல் மனிதன் என்ற இம்மண் பிரஞ்ஞை பற்றியதாக இருப்பதுதான் துக்கமாக இருக்கிறது.

இன்னும் வரும்

ஓம் தத் ஸத்

வி. வெங்குஸ்வாமி அய்யர்.

---

## சமாசாரம்.

**மரத்தினால் ரஸ்தா** :—ஐரோப்பிய நாடுகளில் முக்கிய பட்டணங்களில் ரஸ்தாக்கள் கப்பிகளால் போடப்படாமல் கனமான மரத்துண்டுகளை நெருக்கமாய்ப் பதித்து கெட்டிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதால் ரஸ்தாக்கள் மேடுபள்ளமில்லாமல் சமனாக இருப்பதுடன் செப்பனிடுவதற்கும் செலவு குறைவாயிருப்பதுமன்றி சௌகரியமாகவும் இருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். கல்கத்தாவில் சிலகாலத்துக்கு முன்னால் ஒரு பெரிய ரஸ்தாவில் இவ்வாறு செய்யப்பட்டதில் அது நல்ல நிலைமையிலிருக்கிறதாம். நம் பிரதான பட்டணங்களில் இதைச்சிறுகச் சிறுக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து பார்க்கலாம். செலவுக்குறைவும் சௌகரியமுமே நமக்கு முக்கியம். காட்டிலாகாதார் சொற்பம் கவலையோடுகூட இருக்க வேண்டிவரும்.

**ஒரு பெரிய நன்கொடை** :—அமெரிக்காவிலுள்ள கனடா தேசத்தில் ஒரு காலேஜ் போதகராயிருந்து அநேக நூல்கள் இயற்றிப் பிரசுரம் செய்து வந்த காலஞ்சென்ற **மிஸ்டர் கோல்டுவின்ஸ்மித்** ஆசிரியர் அங்குள்ள ஒரு சர்வ கலாசாலைக்கு 30 லக்ஷம் ரூபா தருமமாய்க் கொடுத்திருப்பதைக் கேட்டுச் சந்தோஷப்படுகின்றோம். இத்தொகை அவர் ஏராளமான சம்பாத்தியத்தில் ஒரு சிறிதே. ஒரு வித்யாகுரு இவ்வாறு செய்வது நம் நாட்டில் ஒரு அதிசயக்கதையாக முடியும். சரஸ்வதியும் இலட்சுமியும் சேர்ந்திருப்பது துர்லபம் என்ற கட்சியாருக்கு இஃதோர் நல்ல உதாரணமாகும்.

**பக்ஷிகளின் நாசம்** :—ஐரோப்பிய ஸ்திரீகளின் அலங்காரத்திற்காக அழகிய இறகும் தோலுமுள்ள பக்ஷிகள் உலகத்தில் எப்பாகத்திலிருந்தாலும் கொல்லப்படுகின்றன. முக்கியமாய் நம் இந்தியாவிலும் இத் துர்வழக்கமிருந்து வருகின்றது. இதனைத் தடுக்க **பார்லிமெண்ட் சபையில் மிஸ்டர் ஆல்டேன்** என்பவர் ஒருமசோதா சட்டம்கொண்டுவந்திருக்கிறார். அதில் பக்ஷிகளின் சிறகுகளையும் தோல்களையும்விற்பது தண்டனைக்கிடமாகும்என்று கண்டிருக்கிறதாம். அது ஒரு நல்ல ஜீவகாருண்யமே. ஒரு கிரௌஞ்ச பக்ஷியை ஒரு வேடன் கொல்லப் பார்த்ததைச் சகியாதவராய் ஸ்ரீவால்மீகி மகாரிஷி இராமயணக் கிரந்தம்பாட நேர்ந்தது.

கீழ் வங்காளத்திலுள்ள **சிட்டகாங்** பட்டணத்தில் ஒரு சம்ஸ்கிருத பாடசாலையில் **பண்டித குஞ்சபஹாரி தர்க்கரத்ந** என்பவரால் கற்பிக்கப்பட்ட **ஸ்ரீமதிவஸந்தி** என்ற ஒரு பெண் வேதாந்த சாஸ்திரத்தில் இண்டர் மீடியெட் பரீக்ஷை தேறினாளென்று வங்காள பத்திரிகைகள் கூறிக்களிக்கின்றன. நம் தென்னிந்தியாவிலும் வேதாந்த சாஸ்திரம் அறிந்த பெண்கள் சிலரிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தமிழே பாஷை. ஸ்ரீ உபய

பாரதி மைத்திரேயி கார்க்கி முதலிய வித்யாரத்நங்கள் முன்காலத்திலேயே சாந்தம் பேசினதை எல்லோரும் அறிவார்கள்.

**மைசூர் கைம்பெண் மடம்** :—மைசூரில் கைம்பெண்மடம் ஒன்றிருக்கின்றது. இது ராவ்பகதூர் **அம்பல நரசிம்ம ஐயங்கார்** அவர்களுடைய நன் முயற்சியால் ஆரம்பம் செய்யப்பட்டது. இம்மடத்தில் 32 கைம்பெண்கள் கல்வி கற்றுவருகிறார்கள். 17 பேர்கள் கோஷாவிலிருக்கிறார்கள். மேற்குறித்த கனவானுடைய செலவிலேயே இவர்கள் போஷிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏழு உபாத்தியாயர்களிருப்பதுடன் இம்மடத்துக்கு உதவிபுரிய 5 சேவகர்களும் 2 சமையல்காரர்களுமிருக்கிறார்கள். செலவு மாதம் ஒன்றுக்கு ரூ 500 ஆகிறது. இதில் மைசூர் கவர்ன்மெண்டார் ரூ 100-ம் **தேவராஜ பகதூர்** அவர்களுடைய தர்மத்திலிருந்து ரூ 100-ம் கொடுபட்டு வருகின்றன. மீதத் தொகையை ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் அவர்களே செலவிட்டு வருகிறார்கள். இவருக்குத் தள்ளாப்பருவமாயிருக்கிறபடியால் இம்மடத்தை மைசூர் **மகாராணியார் காலேஜுடன்** சேர்த்துவிடப் பிரயத்தனம் செய்துகொண்டு வருகிறாராம். பகவான் அவரது மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவாராக. இம்மடமும் நீடூழி நிலைபெற்று அநாதைக் கைம்பெண்களுக்குத்தக்க உதவி புரியுமென்று சர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வித்தியாதர்மம்** :—திருநெல்வேலிஜில்லா எட்டயபுரம் ஜமீன்தார் ஹைஸ்கூலில் ஏழைப்பிள்ளைகள் எந்த ஜாதியாயிருந்தாலும், சம்பளமின்றி இவ்வருஷம் ஜூலை மாதமுதல் படிக்கலாமென்று ஜமீன்தார் அவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். இவ்வேற்பாடு காலஞ்சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தியவர்களின் ஞாபகார்த்தகமாக இராஜ விசுவாசத்தை முன்னிட்டுச் செய்யப்பட்டது. இவ்வாறு கல்விகற்கும் மாணவர்களை **எட்வர்ட் பிரீஸ் கா லர்ஸ்** என்று அழைக்கப்படுவார்களாம். இது ஒரு நல்ல தர்மம். வித்தியா தானத்தினும் விசேஷ தானம் கிடையாது என்பது பிரசித்தம்.

**தபால்லாபிஸின் அபிவிருத்தி** :—தற்காலம் நம் இந்தியாவில் 160,000 மைல்களுக்குத் தபால்மார்க்கம் ஏற்பட்டிருக்கிறது. சுமார் 70,000 தபால் ஆபீஸ்கள் இருக்கின்றன. 80 கோடி கடிதங்களும் பத்திரிகை முதலியவைகளும் தபால் வழியாய்ப் போகிறதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். கால் அணவுக்கு 3000 மைல்தூரம்வரை கார்டு கொண்டுபோய்க் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சகல செலவும்போக 15 லக்ஷ ரூபா மீதம் ஆகிறதாம். சேவிங்ஸ்பாங்கு 8000-க்கு மேலிருக்கின்றன. 12 லக்ஷம்பேர்கள் பணம் கட்டுகிறார்கள். கோடி பவுன் மொத்தத்தொ

கை ஆகிறது. 2 கோடியே 50 லக்ஷம் பவுனுக்கு மணியார்டர் அனுப்பப்படுகின்றனவாம். இந்த இலாகாவைப்போல் ஜனங்களுக்கு பெருத்த நன்மை செய்யக்கூடிய இலாகா இந்த பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் வேறில்லை.

**தந்திஆபிஸின் விருத்தி**:—69,000 மைலுக்குத் தந்திமார்க்கம் ஏற்பட்டிருக்கின்றது. 2,70,000 மைலுக்குத் தந்திக்கம்பிகள் ஏற்பட்டிருக்கின்றன. 7000 தந்தி ஆபீஸ்கள் இருக்கின்றன. ஒருகோடியே இருபது லக்ஷம் தந்திகள் கம்பிமூலமாய் அனுப்பப்பட்டு வருகின்றன. செலவுபோக 66,00,000 பவுன் முதல் தொகைக்குமேல் 100-க்கு 2 முதல் 3 வீதம் வரை மீதம் நிற்கின்றது.

**அமெரிக்காவில் இந்தியர் கோவில்**:—அமெரிக்காவிலுள்ள **ஸான் பிரான்ஸிஸ்கோ** என்ற நகரில் ஓர் **ஹிந்து தேவாலயம்** லக்ஷத்து எண்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. 100 பேர் வரை அக்கோவிலுக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். இதன் மடத்தில் அமெரிக்கர் உள்பட 7 பேர்கள் கைங்கரியம் செய்துகொண்டு ஹிந்து மதத்தைக்கற்று அதனை அந்தப்பாகங்களில் பரப்பமுயன்று கொண்டிருக்கிறார்களென்று கூறப்படுகின்றது. ஹிந்து மதத்தின் உண்மையை அமெரிக்கர்களுக்குத் தக்கவண்ணம் எடுத்துப்போதிப்பின், நம்நாட்டிலுள்ள கோவில்களிலும் அந்நாட்டில் அதிக கோவில்கள் ஏற்படும் என்பதற்கு ஐயமில்லை.

**தஞ்சாவூர்ஜில்லாபோர்டில்** 6லக்ஷம் ரூபாய்வரை சத்திரம் வகையறு தர்மசொத்துக்களை வைத்தவர்களுடைய நோக்கத்தை அநுசரித்து நன்கு செலவுசெய்யவேண்டியது இன்றியமையாதது. அன்னதானத்தில் மீதமான தைவித்தியாதானத்துக்கு ஏற்படுத்தல் மிகுந்த பலனாகும். வைத்திய சாலைகள் ஏற்படுத்துவதும் நலம்தான். ஆனால் ஆயுர்வேத வைத்தியத்தை அநுசரித்துவைத்திய முறை ஏற்படுத்துவதே பழையதர்ம நோக்கங்களுக்கு முரணப்படாதிருக்கும். **திருவையாறு** ஸம்ஸ்கிருத பாடசாலையை மிகவும் விருத்தி செய்து அதிலேயே பழைய வைத்தியம் கற்பித்தல் மிகவும் சிரேஷ்டமாக இருக்கும். மைலாப்பூரில் நடக்கும் சமஸ்கிருத பாடசாலையின் ஒழுங்கைத் தஞ்சாவூர் டிஸ்திரிக்டு போர்டார் அநுசரிப்பது நலமாகும்.

சென்னைக்குகவர்ன்மெண்டார் ஒரு **இராஜகுமாரர்காலேஜ்** ஏற்படுத்தப் போகிறார்கள். இம்மாதிரிகாலேஜ்கள் வடநாட்டில் உண்டு. **லாகூரில் எய்ட்டிஸன்** Atchison காலேஜில் 96 பிள்ளைக்கு வருஷா வருஷம் $4\frac{1}{2}$லக்ஷம் ரூபாயும், **டாலிகாலேஜில்** அதில் பாதிப்பிள்ளைக்கு இரட்டிப்பான செலவும், **ஆஜ்மீர் மேயோ** காலேஜில் 165 பிள்ளைகளுக்கு 10 லக்ஷம் ரூபாவும்

செலவு செய்து வருகிறார்கள். சென்னையில் 24 பிள்ளைகள் வருவார்கள் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. முதல் வருஷச் செலவு 5½ லக்ஷம் ஆகுமாம். இஃது அவசியம் தானா? ஏற்கனவே இருக்கின்ற பள்ளிக்கூடங்களை, இத்திரவியத்தில் பலப்படுத்தியும், ஸ்திரப்படுத்தியும் செய்தல் அதிக பயனுள்ளதாகுமன்றோ?

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள பிரஹ்மஞானக் கிளைச் சபைகளின் 7வது கூட்டம் தாளிதுமீ 17—18உ களில், ஏநங்குடியில் கூடும், மகா-௱-ஸ்ரீ ஸப்,இஞ்சினீர்,ஏ. நீலகண்ட சாஸ்திரிகள் அக்கிராஸனம் வகிப்பார்கள். அடியிற் கண்ட விஷயங்களைப் பற்றி உபந்நியாஸங்கள் நிகழும்.

ஹிந்துமதமும், தியாஸபியும்:— அக்கிராசனாதிபதி—ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்,

தியாஸபிஸ்டுகளின் கடமை:—மகா-௱-௱-ஸ்ரீ T. ராமச்சந்திரராயர் அவர்கள்.

மோனமென்பது ஞானவரம்பு:—மகா-௱-௱-ஸ்ரீ மதுரை ப. நாராயண அய்யர் அவர்கள்.

அப்பியாஸயோகம்:—மகா-௱-௱-ஸ்ரீ டி. எஸ். லெட்சுமி நாராயணஅய்யர் அவர்கள்.

தியாஸபியும் ஞானமார்க்கமும்:—மகா-௱-௱-ஸ்ரீ டி. எஸ். சங்கரநாராயண அய்யர் அவர்கள்.

அன்பு:—மதுரை ப. நாராயண அய்யர் அவர்கள்.

கதா பிரஸங்கம்:—ருக்மணிகல்யாணம் — திருச்சிநாப்பள்ளி மகா-௱-௱ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீநிவாசஅய்யங்கார் அவர்கள்;

பத்திராதிபர்.

# பூர்ணசந்திரோதய விளம்பரம்.

———0———

## சந்தா விவரம்.

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ. இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணா 4.

## விளம்பர விகிதம்.

| விளம்பர விகிதம், ஒருபக்கத்துக்கு. | | அரைப்பக்கத்துக்கு. | |
|---|---|---|---|
| மாசத்திற்கு | ரூ. 2—8—0 | மாசத்திற்கு | ரூ. 1—8—0 |
| 3 மாசத்திற்கு | ,, 6—0—0 | 3 மாதத்திற்கு | ,, 3—8—0 |
| 6 டி | ,, 11—0—0 | 6 டி | ,, 6—0—0 |
| 1 வருஷத்துக்கு | ,, 18—0—0 | 1 வருஷத்துக்கு | ,, 10—0—0 |

சந்தா முதலிய யாவும் அடியிற்கண்டவருக்கு அனுப்பவேண்டும்.

ப. நாராயண அய்யர்,

பத்திராதிபர், 'பூர்ணசந்திரோதயம்,' மதுரை.

---

பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் விலை அணா 6

மனிதன் வமிசாவளியின் உண்மை ... ... ,, 8

ஹிந்துமத தூஷணபரிகாரம் ... ... ,, 4

Avayar's Yoga Aphorisms in English ... Price 8 Annas

தபாற்கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,

பிரசிடெண்டு, பிரஹ்மஞானசபை, மதுரை.

அல்லது

Manager, Theosophist Office, Adayar, Madras. S.

---

திருக்குறள். பரிமேலழகருரையுடன் பாக்கட்சைஸ். புதிய பதிப்பு. உயர்ந்த கலிக்கோபயிண்டு. அரிய பலசீர்திருத்தங்களுடன் அழகாக நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்றது. விலை ரூ. ஒன்று (தபாற்கூலி வேறு.) வேண்டுவோர் மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பெறலாம்.

ஓம்

# பூர்ணசந்திரோதயம்.

## ஓர் விஞ்ஞாபனம்.

---

நம் தேசத்தில் வடமொழி தென்மொழிகளில் மஹான்களால் உபதேசிக்கப்பெற்றுள்ள உண்மைகளும், பிரஹ்மஞான சபையாரால் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள புஸ்தகங்களிலுள்ள உண்மைகளும், ஜனசமூகத்திற்குரிய பொதுவான தர்மங்களும் நீதிமுறைகளும், சீர்திருத்த முறைகளும், தங்க வித்துவான்களைக் கொண்டு வியாசங்கள்ரூபமாய் இப்பத்திரிகையில் வெளியிடப்பெறும். பொதுவாய் ஜனங்களுக்குள் ஞானம்.பரவி அபிவிருத்தியாகவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஏற்பட்டதே அன்றி, பணலாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற கருத்துடன் அன்று. பத்திராதிபரும், வியாசம் எழுதி உதவுகின்றவர்களும், பணவிருப்பமின்றி, இனமாக, வேலை செய்கின்றார்கள்.

50 ரூ.க்குக் குறையாமல் நன்கொடை கொடுக்கிறவர்களுக்கு தங்கள் ஆயுள்காலமுழுமையும், இப்பத்திரிகை பிரசுரமாகும் காலத்தில், மாசம் ஒரு பிரதி மறுபடி சந்தாப் பொறுப்பின்றி அனுப்பப்படும். அவ்விதம் உதவிபுரிகிறவர்கள் பெரிய உபகாரிகள். வருஷ சந்தாதார்களும் உதவிபுரிகிறவர்களாவார்கள். இப்பத்திரிகையைப் பரவச்செய்யும்படி பிரார்த்தனை. தனிப்பத்திரிகை 4 அணா.

ப. நாராயணன்,
"பூர்ணசந்திரோதயம்" பத்திராதிபர், மதுரை.

## அறிவிப்பு.

இதுவரை சந்தா கொடாதவர்கள் இந்தமீ பத்திரிகை பெற்றவுடனே சந்தாத்தொகை ரூ 2 தயவுசெய்து அனுப்பவேண்டும். இல்லாவிடில் அடுத்தமாதப்பத்திரிகையை வி. பி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

இப்பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதுகிறவர்கள் ஒருபக்கத்தில் யாவருக்கும் பயன்படும்படி, எளிய தமிழ்ப்பாஷையில் சுருக்கமாக போதுமான மார்ஜின்விட்டு அடியிற்கண்டவருக்கு அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

ப. நாராயணன்,
"பூர்ணசந்திரோதயம்" பத்திராதிபர், மதுரை.